இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி
Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 195 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 13 – ஞாயிற்றுக்கிழமை 25 பிப்ரவரி 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 195 : Thiruvalluvar Year - 2055 - Maasi 13 - Sunday 25 February 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## ‘தமிழ்நாடு அரசு அனைவரையும் காப்பாற்றும் அரசு’ என்பதை -

# நமது சாதனைகள் வழியே பரப்புரை செய்வோம்!

### மாவட்டச் செயலாளர்கள் – தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப். 25 -**

**“அனைவரையும் காப்பாற்றும் அரசாக நம்முடைய அரசு செயல்படுகிறது என்பதை நமது சாதனைகள் வழியாகப் பரப்புரை செய்வோம்” என கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**இக்கூட்டத்தில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

மாவட்டக் கழகச் செயலாளர்கள் – தொகுதிப் பொறுப்பாளர்கள் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டிய அவசர அவசியம் காரணமாகத்தான் நேற்று சட்டமன்றம் முடிந்தவுடன் இன்று காணொலி வாயிலாக நடத்துகிறோம். நேற்று நான் சட்டமன்றத்தில், ஒரு அழைப்பு விடுத்தேன்.

நம்மை எல்லாம் ஆளாக்கிய நம் உயிர் நிகர் தலைவர் கலைஞரின் நினைவிடமும், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடமும் வருகிற 26ஆம் தேதி, மாலை 7 மணிக்கு சென்னை மெரினா கடற்கரையில் திறக்கப்படுகிறது. தாய் தமிழ் நாட்டையும் நம்கழகத்தையும் காத்த தலைவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றியின் அடையாளமாக மிகப்பிரமாண்டமாக இந்த நினைவகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாக நாம் நடத்துவதால், அந்நிகழ்விற்கு நீங்கள் அனைவரும் தவறாது வருகை தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (23.2.2024) முதல்வரின் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக – மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

அடுத்து, உங்கள் அனைவருக்கும் எனது மகிழ்ச்சி கலந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதிவாரியாக நடைபெற்ற கூட்டங்கள் அனைத்தும் பெரும் வெற்றியடைந்துள்ளன. மிகப் பிரமாண்டமாக நடத்திக் காட்டிவிட்டீர்கள். பெரும்பாலான கூட்டங்களை டி.வி.யில் பார்த்து பிரமித்தேன்.

அனைத்துத் தொகுதிகளிலும் ஒரேமாதிரியாக மேடை அமைக்கப்பட்டு, எல்.ஈ.டி திரைகளுடன் பிரம்மாண்ட கூட்டங்களாக இருந்தன. மக்கள் நிறைந்து காணப்பட்டார்கள், டாப் ஆங்கிளில் எடுக்கப்பட்ட கூட்ட புகைப்படங்களும் மலைப்பை ஏற்படுத்தியது. இதனை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த பொறுப்பு அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டங்கள் பரவலாக மாநிலம் முழுவதும் கழகத்தினரை உற்சாகப்படுத்தியிருக்கின்றன.

தேர்தல் பணிகளைப் பொறுத்தவரை, நாம் மிக வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதியிலும் நாம்தான் முழுமையான வெற்றி பெறுவோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அந்த வெற்றி மகத்தானதாக இருக்க வேண்டும். நாம் பெறும் வாக்குகள் அபரிமிதமாக இருக்கவேண்டும். நம்முடைய ஒவ்வொரு திட்டம்பற்றியும் படித்துவிட்டு, எளிமையாகப் பரப்புரை செய்ய வேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரையும் காப்பாற்றும் அரசு, நமது அரசு என எளிமையாகப் புரியும் வகையில் பரப்புரை செய்ய வேண்டும். இவை அனைத்தையும் இப்போது நாம் தீர்மானமாகப் போட உள்ளோம்.

இவ்வாறு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தேர்தல் பரப்புரையாக - பிப்.26ல்

# ‘இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்’ - திண்ணைப் பிரச்சாரம் தொடங்கட்டும்!

### காணொலி வாயிலாக நடந்த மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, பிப். 25-**

**தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக, நேற்று முன்தினம் (23.2.2024) காலை நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் - மூன்று முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முதன்மையாக, “நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையாக பிப்.26-ல் ‘இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்’ என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தைக் தொடங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

#### கழக நிர்வாகிகளுக்கு நன்றி!

**தீர்மானம் : 1**

சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தி, ‘இந்தியா வெல்லட்டும்’ என்ற உயர்ந்த நோக்குடன் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையை கழகத் தலைவர் அவர்கள் தொடக்கி வைத்துள்ளார்கள். கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, நாடாளுமன்றத் தொகுதிவாரியாக ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கூட்டங்கள் பொதுமக்களிடம் பெரும் தாக்கத்தை உண்டாக்கியுள்ளன. பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டிய கட்சி என்பதற்கான காரணங்களை அடுக்கடுக்காக மக்கள் மன்றத்தில் வைத்துள்ளோம். ‘நாற்பதும் நமதே நாடும் நமதே’ என்ற முழக்கத்துடன் இக்கூட்டங்களை மிகச்சிறப்பாக நடத்தி முடித்துள்ள கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் இக்கூட்டம் நன்றியும் பாராட்டுகளும் தெரிவிக்கிறது.

**தீர்மானம் : 2**

#### ‘இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்’ ஒலிக்கட்டும்!

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நிதியைக் கூடத் தராமல் வஞ்சிக்கும் சூழலில், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம், குடிசை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டித் தரும் ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டம், வறுமை இல்லாத் தமிழ் நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம் என பல்வேறு தரப்பினரையும் குறித்துச் சிந்தித்து, தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொருவரும் பயன்படும் வகையில் நிதிநிலை அறிக்கையில் திட்டங்களை அறிவித்து, திராவிட மாடலை உலகமே பாராட்ட செய்து வரும் முதலமைச்சரின் சீரிய நிர்வாகத் திறனையும், வழிகாட்டும் பாங்கையும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் மனமார வாழ்த்தி நன்றி பாராட்டுகிறது.

திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் 2024–25ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும் வீடுதோறும் கொண்டு சேர்க்கவும், அதேசமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில், பிப்ரவரி 26ஆம் தேதியன்று ‘இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்’ என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தைத் தொடங்குவது என மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

இதற்கென வரும் 24, 25 ஆகிய நாட்களில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தனித்தனியாக, தொகுதிப் பார்வையாளர்கள், BLA2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் கொண்டு கூட்டங்களை நடத்தி, மக்களை அணுகுவது குறித்து ஆலோசிக்கவும், 26ஆம் தேதி முதல் ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் பூத் கமிட்டியினர் ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி, ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடமும் ‘இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்’ என்ற பரப்புரை குறித்து சில நிமிடங்களாவது விளக்கி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுகக் கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்தி, மாண்புமிகு கழகத் தலைவரின் குரல் டெல்லியிலும் நிறைவேறுவதை உறுதிசெய்திட வேண்டும் என இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 3**

#### நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

மார்ச் 1ஆம் தேதியன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் அவர்கள் 71ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்த பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.

தந்தை பெரியாரின் சமூகநீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூகநலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள். அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை மார்ச் 2 மற்றும் 3 தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது எனவும் இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் மகிழ்வோடு தீர்மானிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 25-02-2024

# வேட்டையாடப்படும் விவசாயிகள்

அமைதியாகப் போராடும் விவசாயிகள், இரக்கமற்ற வகையில் வேட்டையாடப்படுகிறார்கள். விவசாயிகள் போராட்டம் தொடங்கி 11 நாட்கள் ஆகிறது. கடந்த 21ஆம் தேதி அன்று சுப்கரன் சிங் என்ற விவசாயி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 21 வயதே ஆனவர் அவர். பஞ்சாப் மாநிலம் பதிண்டா மாவட்டம், பலோக் கிராமத்தைச் சேர்ந்தவர் அவர்.

பஞ்சாப் - அரியானா இடையிலான கானாரி எல்லையில் முகாம் இட்டிருந்த விவசாயிகள், டெல்லியை நோக்கிச் செல்வதற்காக தடுப்புகளை அகற்ற முயன்றார்கள். அப்போது விவசாயிகளைத் தாக்கியது காவல் துறை. அதில் மூன்று விவசாயிகள் பலத்த காயம் அடைந்தார்கள். பாட்டியாலாவில் உள்ள ராஜிந்திரா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் சுப்கரன் சிங் மரணம் அடைந்தார்.

சுப்கரன் சிங் மரணத்தைத் தொடர்ந்து பிப்ரவரி 23ஆம் நாளை ‘கறுப்புநாள்’ என்று அறிவித்துள்ளார்கள் விவசாயிகள். பிப்ரவரி 26 ஆம் தேதி டிராக்டர் பேரணி நடத்தப்பட உள்ளது. மார்ச் 14 அன்று டெல்லி ராம்லீலா மைதானத்தில், ‘மகா பஞ்சாயத்து’ நடத்த இருக்கிறார்கள்.

இந்த முறை சன்யுக்த் கிசான் மோர்ச்சா (அரசியல் சாராதது), பிகேயு (ஷாஹீத் பகத் சிங்), பிகேயு (ஏக்தா சித்துபூர்), கிசான் மஸ்தூர் மோர்ச்சா, பாரதிய கிசான் நௌஜவான் யூனியன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட இயக்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. கடந்த முறை நடந்த விவசாயிகள் போராட்டத்தின்போது பா.ஜ.க. அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் இவர்கள் கேட்கிறார்கள்.

**அப்போது குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு உத்தரவாதம் அளிப்பதாக அரசு உறுதியளித்தது. போராட்டத்தின்போது விவசாயிகள்மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்றும் கூறியது. லக்கிம் - பூர்கேரி சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வேலையும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூபாய் 10 லட்சமும் வழங்கப்படும் என்றும் கூறியிருந்தது. இதே கோரிக்கைகளைத் தான் இப்போதும் விவசாயிகள் வைக்கிறார்கள்.**

எம்.எஸ். சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரையின்படி பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும் என்பது மிகப்பெரிய வாக்குறுதி. அதை மதிக்கவே இல்லை பா.ஜ.க. அரசு.

கொடுத்த வாக்குறுதிகளை பா.ஜ.க. அரசு நிறைவேற்றும் என்று 13 மாதங்கள் காத்திருந்தார்கள் விவசாயிகள். ஏமாற்றம் மட்டுமே கிடைத்தது. மீண்டும் போராட்டப் பாதையைக் கையில் எடுத்து விட்டார்கள்.

விவசாயிகள் டெல்லிக்குள் வந்து போராடுவதைத் தடுக்க கான்கிரீட் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இரும்புத் தடுப்புகளை வைத்துள்ளார்கள். கம்பிவலைகள் போட்டுள்ளார்கள். ஆணிப் படுக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. சாலையில் வாகனம் போக முடியாத வகையில் சாலையை உடைத்தும் வைத்துள்ளார்கள். எதிரி நாட்டு எல்லைகளை விட தலைநகர் டெல்லியில் வைக்கப்பட்டுள்ள தடுப்புகள் மிக மோசமானதாக அமைந்துள்ளது.

**அனுமதியின்றி விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்டால் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என்று அரியானா காவல் துறை, விவசாய சங்கத் தலைவர்களின் வீடுகளில் அச்சிட்டு ஒட்டி வைப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளார்கள். விவசாயிகள் போராட்டத்துக்கு வழக்கறிஞர்கள் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள். பஞ்சாப், அரியானா மாநில வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் அறிவித்துள்ளார்கள்.**

ஒன்றிய அரசின் உத்தரவைத் தொடர்ந்து போராட்டச் செய்திகளைப் பதிவிட்ட 177 விவசாயிகளின் சமூக ஊடகக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. சமூக ஆர்வலர்கள் பலரது கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. ‘எக்ஸ்’ இணையத் தளமானது, விவசாயிகள் போராட்டம் தொடர்பான செய்திகளை நீக்கியதை ஒப்புக் கொண்டுள்ளது. ஒன்றிய அரசு அவர்களுக்கு சில நிர்வாக உத்தரவுகளை அனுப்பிய பின்னர் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

சமூகஆர்வலர்ஹன்ஸ்ராஜ்மீனாவின்கணக்கும்முடக்கப்பட்டுள்ளது. “எனது ட்ரைபல் ஆர்மி (Tribal Army) அமைப்பின் சமூக ஊடகக் கணக்கு இந்தியாவில் அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. எனது பதிவுகள் எந்த வகையிலும் சட்டத்தை மீறவில்லை. நான் இப்போதுதான் எனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளேன். அரசாங்கமும் புதிய யோசனைகளுக்கு அஞ்சுகிறது. எங்களின் குரல் மக்களைச் சென்றடைவதை அரசாங்கம் விரும்பவில்லை, எனவே எந்த உறுதியான காரணமும் இல்லாமல் எங்கள் கணக்குகள் முடக்கப்பட்டு விட்டன,” என்று அவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்குப் பேட்டி அளித்துள்ளார். இவரது, ‘ட்ரைபல் ஆர்மி’ அமைப்பு இந்தியாவில் உள்ள பழங்குடியினர், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் பிரச்சினைகளுக்குக் குரல் எழுப்புகிறது.

விவசாயிகள் பிரச்சினைகள் குறித்து எழுதிவரும் பத்திரிகையாளர் மந்தீப் புனியாவின் தனிப்பட்ட கணக்குகள் மற்றும் அவரது செய்தி இணையத்தளமான காவ்ன் சவேராவின் கணக்கும் முடக்கப்பட்டுள்ளது. “நாங்கள் விவசாயிகளின் போராட்டக் களத்தில் இருந்து செய்திகளை அளித்தோம், எங்கள் குரலை ஒடுக்க எங்கள் கணக்குகள் முடக்கப்பட்டன” என்று அவரும் சொல்லி இருக்கிறார். பத்திரிக்கையாளர் மந்தீப் புனியா, போராட்டம் குறித்த அதிகமான செய்திகளை வெளியிட்டு வந்தார். அவரது இணையத் தளத்தையும் முடக்கிவிட்டார்கள். பஞ்சாபின் சுதந்திரப் பத்திரிகையாளர் சந்தீப் சிங்கின் ‘ட்விட்டர்’ கணக்கும் முடக்கப்பட்டுள்ளது.

**சமூக ஊடகங்களை முடக்கிவிட்டு விவசாயிகளை வேட்டையாடிக் கொண்டு இருக்கிறது பா.ஜ.க. அரசு.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.2.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் “Umagine TN” தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு தொடக்க விழாவில், சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளில் 1000 முக்கிய இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கிடும் முதற்கட்டமாக சென்னையில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள 500 முக்கிய இடங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், , தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், HCL Tech நிறுவன மேலாண்மை இயக்குநர் சி. விஜயகுமார், HP India நிறுவன துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. இஸ்பிதா தாஸ்குப்தா, ஈஸ் சுந்தரம் மற்றும் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், கொரியா, மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் தூதரக அதிகாரிகள், ACT நிறுவன தலைமை இயக்க அதிகாரி சந்தீப் மோகன் குப்தா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் “Umagine TN” தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு தொடக்க விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் படைப்புசார் வல்லுநர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### சென்னை மாநகராட்சியில் 500 முக்கிய இடங்களில் இலவச ‘வைஃபை’ வசதி வழங்கும் திட்டம்!

# ‘யுமாஜின் 2024’ தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 25-

யுமாஜின் 2024 (Umagine TN) தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை சென்னை வர்த்தக மையத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அனைத்து மாநகராட்சிகளிலும் 1000 முக்கிய இடங்களில் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 500 முக்கிய இடங்களில் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.2.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் “Umagine TN” தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்தார்.

அனைத்தும் உள்ளடக்கிய மற்றும் புதுமையான தொழில்நுட்பங்களின் மூலம், சமத்துவச் சமுதாயத்துடன் கூடிய ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எய்திடும் நோக்கிலும், சமூக நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை சமநிலைப்படுத்தும் அதேவேளையில், பொருளாதார வளர்ச்சியை வழங்க வல்ல தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான நோக்கத்தை முன்னெடுப்பதற்கான ஒரு தளமாக, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து உலகளாவிய தொழில்நுட்ப நிகழ்வைச் சென்னையில் நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தொடரின் போது, “யுமாஜின் (UMAGINE) வருடாந்திர தொழில்நுட்ப தலைமை உச்சி மாநாட்டை” சென்னையில் நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, முதலாவது “UmagineTN” மாநாடு 2023 ஆம் ஆண்டு மார்ச் 23 முதல் 25 வரை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

மாபெரும் வெற்றியடைந்த இம்மாநாட்டில் 60 சர்வதேசப் பேச்சாளர்கள் உள்ளிட்ட, 320க்கும் மேற்பட்ட பேச்சாளர்களால் 120 அமர்வுகளுடன் ஏழு பெரும் பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கருப்பொருள் குறித்த விவாதங்கள் நடைபெற்றன. இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநிலம் அடைந்துள்ள வெற்றியை வெளிப்படுத்தும் வகையில் மகத்தான கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மூலம் “UmagineTN 2024” எனும் தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் 23.2.2024 மற்றும் 24.2.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இந்திய தொழில் கூட்டமைப்புடன் (Confederation of Indian IndustryCII) இணைந்து நடத்தப்பெறும் இம்மாநாட்டில், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பம் (Deep Tech), இணையப் பாதுகாப்பு (Cyber Security), இணைக்கப்பட்ட நுண்ணறிவு (Connected Intelligence), நிலைத்தன்மை (Sustainability), உலகளாவிய கண்டுபிடிப்பு மையங்கள் (Global Innovation Centres) மற்றும் உயிர்ப்பூட்டல் (Animation), காட்சி விளைவு (Visual Effects), விளையாட்டு (Gaming) மற்றும் களிப்படக்கதை (Comics) (AVGC) மெய்மைவிரிவாக்கம் (Extended Reality) போன்ற முக்கியப் பொருண்மைகள் குறித்த விவாதங்கள் நடைபெறவுள்ளது. இந்த UmagineTN 2024 நிகழ்வின் கருப்பொருள் AT’TN அதாவது, தமிழ்நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை விரைவு படுத்தல் ஆகும். 120 தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் 10,000க்கும் மேற்பட்டவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரில் வெளியிடப்பட்ட சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் 1000 முக்கிய இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, முதற்கட்டமாக சென்னையில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களான பூங்காக்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் கடற்கரை ஆகிய முக்கிய 500 இடங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், மின்னாளுமை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிர்வாக அதிகாரி பிரவீன் நாயர், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பி.ரமண சரஸ்வதி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஏ.ஜான் லூயிஸ், HCL Tech நிறுவன மேலாண்மை இயக்குநர் சி.விஜயகுமார், HP India நிறுவன துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. இஸ்பிதா தாஸ்குப்தா, ஈஸ் சுந்தரம் மற்றும் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், கொரியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் தூதரக அதிகாரிகள், ACT நிறுவன தலைமை இயக்க அதிகாரி சந்தீப் மோகன் குப்தா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டை

# உலகின் மனிதவளத் தலைநகராக மாற்றுவோம்!

## சென்னையில் - தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.02.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற Umagine TN 2024 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் உரையாற்றுகையில், "தமிழ்நாட்டை உலகின் மனிதவளத் தலைநகராக மாற்றுவோம்!" என்று குறிப்பிட்டார்.**

**இம்மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தகவல் தொழில்நுட்பத்தை முன்வைத்து நடைபெறும் இந்த மாபெரும் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களை முதலில் நான் பாராட்டுகிறேன்.

மூன்று தலைமுறையாக, நாட்டிற்கு தொண்டாற்றி வரும் குடும்பத்திற்குச் சொந்தக்காரர் அவர்! இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான திருச்சி என்.ஐ.டியிலேயும், உலகத்தின் தலைசிறந்த கல்வி நிறுவனமான எம்.ஐ.டியிலேயும் படித்தவர். பல ஆண்டுகள் வெளிநாட்டில் படித்து வேலை செய்திருந்தாலும், அங்கேயே தங்கிடாமல், தமிழ்நாட்டுக்குத் திரும்ப வந்து, இங்கேயும் தொழில் வர்த்தகம் என்று ஒதுங்கிடாமல், அவருடைய அப்பா, தாத்தா போலவே அரசியலில் பங்கெடுத்து, தன்னுடைய அறிவாற்றலை தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு கொடுத்துக் கொண்டு இருக்கக்கூடியவர் அவர்.

### வேலைவாய்ப்பு அதிகரிக்கும்!

நம்முடைய ஆட்சியில் முதல் இரண்டு ஆண்டுகளில் நிதியமைச்சராக மிகச்சிறப்பாக செயல்பட்டு பல மாற்றங்களுக்கு வித்திட்டவர் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள். அவரை நான் ஐ.டி. துறைக்கு மாற்றினேன். அவரை நான் மாற்றியதற்கு காரணம் ஐ.டி. துறையிலேயும், நிதித்துறை போல மாற்றங்கள் தேவைப்பட்டது. அவருடைய தலைமையில் தகவல் தொழில்நுட்பத் துறை மூலமாக தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியும், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகமாகும்.

நான் கொடுத்த பொறுப்பை அவர் சிறப்பாக செயல்படுத்துகிறார் என்பதற்கு இந்த மாநாடே எடுத்துகாட்டாய் அமைந்திருக்கிறது. அவருடைய பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

கால்நூற்றாண்டுக்கு முன்பே, வருங்காலம் என்பது, கணினியின் காலம்; தொழில்நுட்ப காலம் என கணித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்! அதனால்தான், 1996-2001 காலகட்டத்திலேயே கணினி வாசலை தமிழ்நாட்டில் திறந்து வைத்தார். அவரால் மேற்கொள்ளப்பட்ட தொலைநோக்குப் பார்வைகொண்ட முயற்சிகளால்தான், இந்தியாவின் ஐ.டி. தொழிற்புரட்சியில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது.

இந்தியாவிலேயே முதன்முதலாக 1997ல் ஐ.டி. பாலிஸி, ஐ.டி.க்கு என்று தனித் துறை, டாஸ்க் ஃபோர்ஸ், 'தமிழ்நெட்99' என்று ஐ.டி. துறையில் தமிழின் மாபெரும் பாய்ச்சல் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் தொடங்கியது. நாட்டின் முதல் ஐ.டி. பார்க்கை, டைடல் பூங்காவை 2000ஆம் ஆண்டில் உருவாக்கினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.2.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் "Umagine TN" தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து, உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், HCL Tech நிறுவன மேலாண்மை இயக்குநர் சி. விஜயகுமார், HP India நிறுவன துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. இஸ்பிதா தாஸ்குப்தா, ஈஸ் சுந்தரம் மற்றும் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், கொரியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் தூதரக அதிகாரிகள், ACT நிறுவன தலைமை இயக்க அதிகாரி சந்தீப் மோகன் குப்தா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்!

இது எல்லாவற்றையும் கால் நூற்றாண்டுக்கு முன்பாகவே செய்த பெருமை கலைஞரை தான் சேரும்! அதனால்தான், நாங்கள் அவரை நவீன தமிழ்நாட்டின் சிற்பி என சொல்கிறோம். ஐ.டி.க்கு கலைஞர் காலம் எப்படி பொற்காலமோ, அதேபோல, நமது திராவிட மாடல் அரசின் ஆட்சிக்காலமும் இருக்க வேண்டும் என்று செயல்படுகிறோம்! அதனால்தான், நீண்ட ஆலோசனை களுக்கு பிறகு, தமிழ்நாடு தரவு மைய கொள்கை 2021, தமிழ்நாட்டிற்கான தரவுக் கொள்கை 2022, தகவல் தொழில்நுட்பத் துறைக்கான தர நிலை கொள்கை-2022, தகவல் தொடர்பு உட்கட்டமைப்பிற்கான கொள்கை2022 என முக்கியமான தகவல் தொழில்நுட்ப கொள்கை முடிவுகளை அறிக்கைகளை அரசு வெளியிட்டிருக்கிறது.

அதோடு, பொது, தனியார் கூட்டு முறையில் தகவல்தொழில்நுட்ப நகரங்களும், டைடல் பூங்காக்களும் உருவாக்க, தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டமைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டோம். அனைத்து தகவல் தொடர்பு நிறுவனங்களு டன் பேச்சுவார்த்தை நடத்தி 5G அலைக்கற்றை அமைப்பதை துரிதப்படுத்தினோம்.

இயற்கை பேரிடர் காலங்களில், இணையம் மற்றும் தகவல்தொடர்பு இணைப்புகள் செயலிழக்காமல் இயங்க, தேவையான முன்னேற்பாடு கள் குறித்து விவாதித்தோம். அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கணினி விளையாட்டுகள் மற்றும் காமிக்ஸ் துறை சார்ந்த நிறுவனங்களுடன் இரண்டு முறை கலந்துரையாடல்கள் நடத்தினோம்.

### எனக்கு 2 கனவுகள்!

நம்முடைய தமிழ்நாட்டில் இந்தத் துறைகளில் வர்த்தகம் துவக்குவதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம். நான் அடிக்கடி சொல்வதுண்டு, எனக்கு இரண்டு கனவுகள் இருக்கிறது.

ஒன்று, தமிழ்நாட்டை டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்தவேண்டும்!

மற்றொன்று, உலகத்தின் மனிதவள தலைநகரமாக தமிழ்நாட்டை மாற்றவேண்டும்! அதற்காக முழு ஈடுபாட்டுடன் என்னை நானே அர்ப்பணித்து கொண்டிருக்கிறேன். வளர்ச்சி என்பதை வெறும் எண்கள் மட்டும் அல்ல, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் காட்டுகிறோம். அனைத்து துறைகளும் அதற்கான செயல் திட்டங்களுடன் சிறப்பாக செயல்படுகிறது. அதில் முக்கியமான துறையாக தகவல் தொழில்நுட்பத் துறை இருக்கின்றது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!

**கால்நூற்றாண்டுக்கு முன்பே, வருங்காலம் என்பது, கணினியின் காலம்; தொழில்நுட்ப காலம் என கணித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்! அதனால்தான், 1996-2001 காலகட்டத்திலேயே கணினி வாசலை தமிழ்நாட்டில் திறந்து வைத்தார். அவரால் மேற்கொள்ளப்பட்ட தொலை நோக்குப் பார்வைகொண்ட முயற்சிகளால்தான், இந்தியாவின் ஐ.டி. தொழிற்புரட்சியில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது.**

ஐ.டி. துறையுடன் வளர்ச்சியும், முன்னேற்றமும் இப்போது நம்முடைய கண்முன்னாடி தெரிகிறது. தலைவர் கலைஞர் 'தமிழ்நெட்99' மாநாட்டை நடத்தி 25 ஆண்டுகள் ஆகின்ற இந்த நேரத்தில், தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக 'கணித்தமிழ் 24' மாநாட்டை நடத்தியிருக்கிறோம்.

### திராவிட மாடல் ஆட்சியின் தனித்தன்மை!

10 நாடுகளிலிருந்து 60க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், அறிஞர்கள், தொழில்துறை வல்லுநர்கள் இதில் கலந்து கொண்டார்கள். செயற்கை நுண்ணறிவு, இயந்திரவழிக் கற்றல் போன்ற துறைகளில் மொழியின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள, செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, ஆங்கிலம் அல்லாத மொழியில் ஒரு தொழில்நுட்ப மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியினுடைய தனித்தன்மை!

'எல்காட்டில்' அனுமதி வழிமுறைகளை மேம்படுத்தியதால், 5G அலைக்கற்றை நடைமுறைப்படுத்துவதை துரிதப்படுத்தியிருக்கிறோம். தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகத்தை அறிமுகப் படுத்தியது, சென்ற ஆண்டு செய்த சாதனைகளில், முக்கியமான ஒன்று!

நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த தமிழ்நாடு ஃபைபர்நெட் அமைப்பை விரைவுபடுத்தியிருக்கிறோம். 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், ஐ.சி.டி. வழியாக நடத்தப்படுகின்ற பயிற்சித் திட்டங்களை அதிகரித்திருக்கிறோம்.

### இது ஒரு டிஜிட்டல் புரட்சி!

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழியாக 36 துறைகளின் 751திட்டங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற 38 ஆயிரத்து 292 இ-சேவை மையங்களில், 25 ஆயிரத்து 726 மையங்கள் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டிருக்கிறது!

இது ஒரு 'டிஜிட்டல் புரட்சி' இல்லையா? சென்னையில் ஆயிரம் வைஃபை ஹாட்ஸ்பாட்ஸ் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு, சென்னையில் மட்டும், 11 மில்லியன் சதுர அடி அளவிலான புதிய அலுவலகங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே, இந்தத் துறை எப்படிப்பட்ட வளர்ச்சியை அடைந்திருக்கிறது என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

2021-2022ஆம் ஆண்டுகளில், சென்னைப் பெருநகரப்பகுதியில் பணியாளர்களுடைய எண்ணிக்கை 40 விழுக்காடு வரைக்கும் அதிகரித்திருப்பதாக சென்னை பெருநகர மாநகராட்சி கவுன்சில் மதிப்பிட்டிருக்கிறது. கோவையிலேயும் முன்பு எப்போதையும்விட அலுவலகங்கள் அதிகமாக திறக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து நாட்கள் முன்பு, கடந்த பிப்ரவரி 19 அன்று வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில், புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கிறது. புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்குகின்ற புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில், புதிய தகவல்தொழில்நுட்ப பூங்கா 20 லட்சம் சதுர அடியில், ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட இருக்கிறது.

அடுத்த 5 ஆண்டுகளில், 200 கோடி ரூபாய் செலவில், மாநிலத் தரவு மையம் மேம்படுத்தப்படும்.

மதுரையில், புதிய டைடல் பூங்காக்கள் 6.4 லட்சம் சதுர அடியில 345 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட உள்ளது.

திருச்சியில், 6.3 லட்சம் சதுர அடியில் 350 கோடி ரூபாய் செலவில் புதிய டைடல் பூங்காக்கள் உருவாக்கப்பட இருக்கிறது.

தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடியில் நியோ டைடல் பூங்காக்கள் அமைத்து 13 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட உள்ளது. 30 கோடி ரூபாயில் மின் அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

### ஐ.டி. துறையை வளர்க்க பல்வேறு திட்டங்கள்!

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலத்தில் இலவச Wifi வசதிகள் என பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறோம். இவையெல்லாம் நிச்சயம் ஐ.டி. துறையை வளர்க்கும்!

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையிலான இந்த துறையில், தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

தமிழ்நாட்டை உலகின் மனிதவளத் தலைநகரமாக மாற்றுவோம்! தகவல் தொழில்நுட்பத் துறையினர் தேடிவரும் நகரமாக ஆக்குவோம்! தொழில்நுட்பத்தில் உலக நாடுகள் எப்படிப்பட்ட முன்னேற்றத்தை அடைகிறதோ, அதே தொழில்நுட்ப வளர்ச்சியை அதே காலத்தில் உருவாக உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!எனக்கூறிவிடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## டென்மார்க் - நார்வே நாடுகளில் உள்ளதுபோல - காவிரியில்

# ஆகாயத் தாமரைகளை அகற்றி எருவாக மாற்றும் திட்டம் - அரசு பரிசீலிக்கும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!

**சென்னை, பிப். 25-**

**சட்டப் பேரவையில் உறுப்பினர் பி.தங்கமணி கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் துரைமுருகன், டென்மார்க் - நார்வே நாடுகளில் உள்ளதுபோல - காவிரியில் ஆகாய தாமரைகளை அகற்றுவது மாத்திரமல்ல, அதை எருவாக மாற்றுகிற திட்டத்தை தமிழ்நாடு அரசுப் பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் அமைச்சர் துரைமுருகன் அளித்த பதில் வருமாறு:-



**பி.தங்கமணி:** காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் இப்பொழுது ஆறே தெரியாத அளவிற்கு ஆகாயத் தாமரைகள் மூடிவிட்டன. அதே போல, டெல்டா பகுதிகளிலும் ஆகாயத் தாமரைகள் மூடிவிட்டன. இப்போது குடிப்பதற்கு தண்ணீர் அங்கே எடுக்கின்றபோது, வாசம் அதிகமாக வருகின்றது. தண்ணீரிலே விஷம் கலக்கின்ற அளவிற்கு ஆகாயத் தாமரைகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த ஆகாயத் தாமரைகளை அகற்றுவதற்கு அரசு சிறப்புத் திட்டத்தை கொண்டுவந்தால்தான் இதுபோன்ற வறட்சிக் காலங்களில், ஏனென்று சொன்னால் அருகிலே இருக்கின்ற சாக்கடைத் தண்ணீர் அதில் கலந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அந்த ஆகாயத் தாமரைகள் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. ஆக அதற்கு ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் பி. தங்கமணி அவர்கள் சொல்வது நியாயம்தான். தஞ்சை மாவட்டம் போன்ற பரந்த இடங்களில் எல்லாம் ஆகாயத் தாமரைகளை எடுத்திருக்கிறோம். சமீபத்திலே நான் Denmarkக்கும் Norwayக்கும் போகிறபோது, அந்த ஊர்களிலே இப்படித்தான் நிறைய ஆகாயத் தாமரைகள் இருந்தது. அங்கே எப்படிச் செய்கிறார்கள் என்று நான் கேட்டேன். அவற்றையெல்லாம் அகற்றி எடுத்து, எருவாக மாற்றுகிற ஒரு scientific methodஐ அவர்கள் கையாளுகிறார்கள். எனவே, அதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றை நாங்கள் கேட்டிருக்கிறோம். அதுவந்தால் அந்த ஆகாயத் தாமரைகளை எடுப்பது மட்டுமல்ல, அவை நல்ல உரமாக பயன்படுகிறது, மாற்றமுடியும் என்கிறார்கள் அந்தத் திட்டம் குறித்து அரசு பரிசீலிக்கும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

---

## தமிழ் வளர்ச்சி - செய்தித்துறை

# அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தந்தை - முத்தூர் சா.பெருமாள் சாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, பிப். 25-**

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதனின் தந்தை முத்தூர். சா.பெருமாள்சாமி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-**



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான மு.பெ.சாமிநாதன் அவர்களின் அருமைத் தந்தை முத்தூர். சா. பெருமாள் சாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

தந்தையை இழந்து தவிக்கும் மு.பெ. சாமிநாதன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தேன்.

அப்போது, 94 ஆண்டுகளைக் கடந்து நிறைவாழ்வு வாழ்ந்த தன் தந்தை, அவரது இறுதி மூச்சுவரை உழவராக வாழ்ந்ததை அமைச்சர் சாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்.

பெருமாள்சாமி அவர்களது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் மீண்டும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டு மீனவர்கள் 11 பேர் சவுதி அரேபியாவில் சிக்கிக் கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துரித நடவடிக்கையால் சென்னை திரும்பினர். அவர்களை அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோர் வரவேற்றனர். உடன் 11 மீனவர்களையும் அழைத்து வந்த சவுதி அரேபிய கழக அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் உடனுள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையால்

# சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டு மீனவர்கள் 11 பேர் தாயகம் திரும்பினர்!

## அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான்- மனோ தங்கராஜ் வரவேற்றனர்!

சென்னை, பிப்.25-

கன்னியாகுமரியைச் சேர்ந்த 9 பேர், இராமநாதபுரத்தைச் சேர்ந்த 2 பேர் என்று தமிழ்நாட்டு மீனவர்கள் சவுதி அரேபியா தம்மாமில் சிக்கித்தவித்தனர். இந்த 11 பேரின் குடும்பத்தினரும் தமிழ்நாடு அரசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அவர்களை சவுதி அரேபியாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு மீட்டு வர நடவடிக்கை எடுக்கும் படி கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கையை பரிவுடன் கேட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோரை இது குறித்து நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ், கழக அயலக அணிச் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி, மற்றும் டாக்டர் கலா நிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் ஆலோசனையின் பேரில் சவுதி அரேபிய கழக அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் இந்தய தூதரகம் உதவியுடன், சவுதி அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்புடன் இவர்களை சட்டபூர்வமாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு 21.2.2024 அன்று சவுதியில் இருந்து சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழ்நாட்டிற்குத் திரும்பிய 11 மீனவர்களையும் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோர் வரவேற்று அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

சென்னை திரும்பிய 11 மீனவர்கள் தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது டன் இதற்காக பெரும் முயற்சி மேற்கொண்ட அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான்,மனோ தங்கராஜ் மற்றும் அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் கலாநிதி வீராசாமி அதுமட்டுமல்லாமல் கழக அயலக அணி சவுதி அரேபிய நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சிஆரிஃப் மகவூர், முகவை சுனி முகம்மது, துறையூர் கமால் பாட்சா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இந்த 11 மீனவர்களையும் மீட்பதற்காக கன்னியாகுமரி மாவட்ட அயலக அணி பொறுப்பாளர் பாலூர் தேவா வழக்கு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும் பார்த்துக் கொண்டார்.

மேலும் சவுதி அரேபியாவில் இருந்து சென்னை திரும்பிய 11 மீனவர்களும் கன்னியா குமரி, இராமநாதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் கும்பகோணம் கோட்டத்தில், கும்பகோணம் பகுதியைச் சுற்றியுள்ள நவகிரக தலங்களுக்கு, ஒரே நாளில் ஆன்மீக பயணம் சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுலாப் பேருந்தை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., செ.இராமலிங்கம் எம்.பி., அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப.தமிழழகன், வருவாய் கோட்டாட்சியர் பூர்ணிமா உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை. பிப்.25-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இன்று (25.02.2024-ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையிலும், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

பொருள்: கழகத் தலைவர் தமிழக முதல்வர் பிறந்த நாள் விழா, நாடாளுமன்றத் தேர்தல் பணிகள், கழக ஆக்கப் பணிகள்.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 23.02.2024 அன்று நடைபெற்ற கலைச்சங்கமம் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, கலைநிகழ்ச்சிகளை நடத்திய 4 குழுவினரை பொன்னாடை அணிவித்தும், தலா ரூ.30,000/க்கான காசோலையினையும் வழங்கி, பாராட்டினார். உடன் மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை. பிப்.25-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: இன்று (25.02.2024-ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., அறந்தாங்கி ராசன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை விஜயா, பி.டி.அரசக்குமார், த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் , வி.என்.மணி, மிசா சி.ராமநாதன், செ.அசோக் பாண்டியன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என்.போஸ், சுப.சரவணன், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், மாவட்டச் கழக நிர்வாகிகள் எஸ்.எஸ்.கருப்பையா, பி.ராஜேஸ்வரி, க.மதியழகன், எம்.லியாகத் அலி, ஆ.செந்தில் , ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்: கழகத் தலைவர் தமிழக முதல்வர் பிறந்த நாள் விழா, நாடாளுமன்றத் தேர்தல் பணிகள், கழக ஆக்க பணிகள்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு !



தருமபுரி, பிப். 25-

தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர்-கழக தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் காணொலி காட்சி மூலம் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டவாறும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படியும் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2024-ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணி அளவில் தருமபுரி வன்னியர் கல்யாண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் ஏ.கே.தருண், கே.வி.குப்பம் கோபி முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி சிறப்புறையாற்ற உள்ளார். அது சமயம் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 நிர்வாகிகள் என அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(குறிப்பு : பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் அனைத்து BLA2 நிர்வாகிகளை தவறாமல் அழைத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன்)

பொருள் : 1. இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரம் தொடங்குவது குறித்து

2. மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது,மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடத்துவது குறித்து.

3. நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.முத்துசாமி

### பிப்ரவரி 25 (2018)



மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


தாங்கள் வகுத்துக்கொடுத்த

கலைஞர் - அன்பில்

வழியில் எங்கள் பயணம் தொடரும்...




முன்னாள்

முசிறி ஒன்றியக் கழக செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்

முசிறி விவசாய சங்க கூட்டுறவு வங்கி தலைவர்

குணசீலம் ஊராட்சி மன்ற தலைவர்

எங்கள் தாத்தா

தே.பொன்னுசாமி

38ம் ஆண்டு நினைவுநாளில்

வணங்குகிறோம்...

P.சேகர் அருண் BABGL.,

மாண்புமிகு தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்

## கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிய

# மாவட்டச் செயலாளர்களின் பேருழைப்பை ஒருபோதும் மறக்க மாட்டேன்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



சென்னை, பிப்.25-

**"கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிய மாவட்டச் செயலாளர்களின் உழைப்பை என் வாழ்நாள் முழுவதும் நான் மறக்க மாட்டேன்" என்று குறிஞ்சி இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்...**

கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த கழகத் தலைவர் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளுக்கு நன்றி கூறும் நிகழ்ச்சி சென்னை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இளைஞர் நலன் மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்ட செயலாளர்களுக்கும் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கழக நிர்வாகிகளுக்கும் கழக சார்பு அணி நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்து பேசி இரவு விருந்து அளித்தார். அப்போது அவர் பேசுகையில், சேலத்தில் நடந்த இளைஞர் அணி மாநாட்டைவெற்றி மாநாடாக்கிய மாவட்டச் செயலாளர்களின் உழைப்பை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன் என்றார். இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பேசியதாவது:

இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கின்ற வகையில், ஒரு மிகுந்த எழுச்சியான மாநாட்டை, கடந்த ஜனவரி 21ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி மாநாட்டின் மூலம் அந்த வெற்றிக்காக உழைத்த பாடுபட்ட உங்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்து, உங்கள் அத்தனை பேரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம் குறிஞ்சி இல்லத்தில் உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை. இதை அண்ணா அறிவாலயத்திலேயே நடத்தி இருந்திருக்கலாம், கலைஞர் அரங்கத்திலேயே நடத்தி இருந்திருக்கலாம். என்ன, எனக்கு ஒரு ஆசை உங்கள் அத்தனை பேரையும் அழைத்து, அசைவ உணவு, சைவ உணவு போட வேண்டும் என்று ஆசை. அதனால், உங்கள் அத்தனை பேருக்கும் இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு, இரவு அசைவ உணவு, சைவ உணவு தயாராக இருக்கின்றது. அதனால்தான் இந்த `குறிஞ்சி இல்லத்தில்' இந்த நிகழ்ச்சியை நாங்கள் நடத்தி இருக்கின்றோம்.

### எழுச்சியோடு நடந்த மாநாடு!

மாநாடு முடிந்து, இன்றைக்கு தேதி பிப்ரவரி 22 கிட்டத்தட்ட நேற்றோடு ஒரு மாதம் தாண்டி விட்டது. ஆனால், நேற்று நடைபெற்றது போல் அந்த மாநாட்டின் நினைவுகள் என்னுடைய மனதில் இன்னும் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்குச் சிறப்பாக நம் இளைஞர் அணி மாநாடு மிகுந்த எழுச்சியோடு நடைபெற்று இருக்கின்றது.

கிட்டத்தட்ட 7 லட்சம் இளைஞர்கள் மாநாட்டின் திடலுக்குள் இருந்து பங்கேற்று இருக்கிறார்கள். இரண்டு லட்சம் பேர் மாநாட்டுக்குள்ளேயே வர முடியாத அளவிற்கு, போக்குவரத்து நெரிசல் இருந்ததையும் நீங்கள் அறிவீர்கள். பொதுவாக, ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களும் மாநாடு நடத்துவார்கள். அதை தாய்க் கழகமே நடத்துவார்கள்.

ஆனால், இந்த முறை தேர்தலுக்கு முன்பாக ஒரு மாநாடு நடத்துகின்ற வாய்ப்பை இளைஞர் அணிக்கு அளித்த முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும், நம் கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் தலைமைக் கழக நிர்வாகிகள் அத்தனைபேருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், மாநாட்டுக்கான பாடலை நம் அண்ணா அறிவாலயத்தில் வெளியிட்டு எங்களையெல்லாம் வாழ்த்தினார்கள். அவருக்கு நன்றி.

மாநாடு அறிவித்த நாள் முதல் இளைஞர் அணியோடு தோளோடு தோள் நின்ற கழகத் துணை பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், கழக சார்பு அணிகளின் செயலாளர்களுக்கும், துணைச் செயலாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் இளைஞர் அணி மாநில மாநாட்டைக் கொடியேற்றி தொடங்கி வைத்த கழகத் துணை பொதுச் செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மாநாட்டினைத் திறந்து வைத்த மாநில மாணவர் அணிச் செயலாளர் எழிலரசன் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக, இளைஞர் அணியின் பொறுப்பாளர் அண்ணன் ஆ.ராசா, மாநாடு ஏற்பாட்டில் ஒவ்வொரு நிலையிலும் நமக்கு ஆலோசனைகளை வழங்கி, உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் என் நன்றி.

### மாநாட்டுப் பொறுப்பாளராக நேரு

கழக முதன்மைச் செயலாளர் நம் தலைவர் அவர்கள் மாநாட்டுப் பொறுப்பாளராக நேரு அண்ணன் அவர்களை எப்போது அறிவித்தார்களோ, அப்போதே நான் முடிவு செய்து விட்டேன். இந்த மாநாடு மிகப்பெரிய ஒரு வெற்றி மாநாடாக இருக்கும் என்று, அந்த நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டது. எனவே, தொடர்ந்து ஐந்து மாதங்களாக மாநாட்டுப் பணிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்த அண்ணன் நேரு அவர்களுக்கு மீண்டும் மீண்டும் இளைஞர் அணியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் கழக மாநாட்டை நடத்துவதற்கு எந்த அளவுக்கு உழைப்பீர்களோ அதைவிடக் கூடுதலாக உழைத்து, நம்முடைய இளைஞர் அணி மாநாட்டை நீங்கள் எல்லாம் வெற்றி பெற செய்திருக்கிறீர்கள்.

இங்கே வந்திருக்கக்கூடிய உங்களில் பலர் இளைஞர் அணியில் இருந்து, பதவி உயர்வு பெற்று தாய்க் கழகத்திற்குச் சென்றவர்கள். நீங்கள் இன்றைக்கு மாவட்டச் செயலாளராக, அமைச்சராக இருக்கிறீர்கள். ஆனாலும், உங்களுடைய பிறந்த வீடு என்பது உங்களின் பலருக்கு இளைஞர் அணிதான். எனவே, பிறந்து வீட்டை என்றைக்குமே மறக்கக் கூடாது என்று சொல்லுவார்கள்.

எப்பொழுதுமே பிறந்த வீட்டின் நிகழ்ச்சியை நடத்துவதில் எல்லோருக்குமே ஒரு தனி ஈடுபாடும் அக்கறையும் இருக்கும். அதே அக்கறையோடும், உணர்வோடும்தான் இந்த இளைஞர் அணி மாநாட்டுப் பணிகளையெல்லாம் நீங்கள் செய்து முடித்தீர்கள்.

### நீங்கள் இல்லாமல் மாநாடுக்கு வெற்றி இல்லை

இளைஞர் அணியின் நிரந்தர செயலாளர் நம் தலைவர் அவர்கள்தான் என்று நான் பேசும்பொழுது மாநாட்டு மேடையிலேயே சொன்னேன். நம் கழகத் தலைவரின் தளபதிகளாகத் திகழும் நீங்கள் இல்லாமல் இளைஞர் அணியின் மாநாடுக்கு வெற்றி கிடைத்திருக்காது. கழகத்தின் மீதும் இளைஞர் அணி மீதும், என் மீதும் இருக்கின்ற அந்தத் தனிப்பட்ட பாச உணர்வுதான் உங்களுடைய இந்தப் பணிகளுக்கு எல்லாம் காரணம்.

இளைஞர் அணி மாநாடு என்று முடிவானதுமே தமிழ்நாடு முழுவதும் பயணித்துச் செயல்வீரர் கூட்டங்களை நடத்தினோம்.

மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்கள் தான் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சார்பாக, முதல் செயல்வீரர் கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக் காட்டினார். அதன்பிறகு வருவாய் மாவட்டங்களுக்கு ஓரிடம் என்று, 40க்கும் அதிகமான செயல்வீரர் கூட்டங்களை நடத்தி முடித்தோம்.

தஞ்சை திலகர் திடலில் நடைபெற்ற செயல்வீரர் கூட்டம் இரண்டாவது கூட்டம். அதனை மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணன் துரை.சந்திரசேகர், அண்ணன் எஸ்.கே., அண்ணன் அண்ணாதுரை அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். பெரியார், அண்ணா, கலைஞர், கழகத் தலைவர் பேசிய திலகர் திடலில் தஞ்சை மாவட்ட இளைஞர் அணி தம்பிகளைச் சந்தித்துப் பேசுகின்ற அந்த வாய்ப்பு கிடைத்தது.

அப்பொழுது மிகப்பெரிய ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அதேபோல் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவாரூர் மண்ணிலிருந்து கலைஞர் கோட்டத்திற்கு அருகாமையிலேயே கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்கள் இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தை நடத்திக் காட்டினார்கள்.

விருதுநகரில் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு அவர்கள், தூத்துக்குடியில் அக்கா கீதா ஜீவன் அவர்கள், அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும் மிகச் சிறப்பான முறையில் செயல்வீரர் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள்.

### செயல்வீரர் கூட்டம் ஒரு மினி மாநாடு!

இங்கு வந்திருக்கின்ற மாவட்ட செயலாளர்கள் அனைவருமே ஒவ்வொரு செயல்வீரர் கூட்டத்தையும் ஒரு மினி மாநாடு போல நடத்திக் காட்டினார்கள். பல மாவட்டங்களில் செயல்வீரர் கூட்டம் மட்டுமின்றி, கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற அந்த நிகழ்ச்சியும் தொடர்ந்து செய்து கொண்டு வந்தார்கள்.

குறிப்பாக, இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தின் போது கோவை, ஈரோடு போன்ற மேற்கு மாவட்டங்களில் மிகப்பெரிய அளவிலான எழுச்சியைக் காண முடிந்தது. அந்த எழுச்சி தேர்தலிலும் எதிரொலிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதற்கு அமைச்சர் அண்ணன் முத்துசாமி அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கார்த்திக், அண்ணன் தொண்டாமுத்தூர் ரவி, அண்ணன் தளபதி முருகேசன் ஆகியோருக்கு என்னுடைய நன்றியை இளைஞர் அணியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### செயல்வீரர் கூட்டத்தை நடத்திக் காட்டினார்

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் ஒன்றிய அரசினுடைய சதியால் அவர் அங்கே இல்லாத சூழல் இருந்தாலும், அவர் இருந்தால் எப்படிச் சிறப்பாக நடைபெறுமோ அதே அளவுக்குச் சிறப்பாக கரூர் மாவட்ட தி.மு.கவினர் மிகச் சிறப்பாகச் செயல்வீரர் கூட்டத்தை நடத்திக் காட்டினார்கள்.

`தீரர்கள் கோட்டம்' திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற செயல்வீரர் கூட்டத்தை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அருமை சகோதரர் அன்பில் மகேஷ், காடுவெட்டி தியாகராஜன், அண்ணன் வைரமணி ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.

திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மாநாட்டிற்கான கவுண்டன் (COUNTDOWN) தொடங்குகின்ற வகையில், வித்தியாசமாக `டைமர்' சொல்லப்படுகின்ற மெஷினை என்னை வைத்துத் தொடங்கி வைத்தார். புதுக்கோட்டை செயல்வீரர் கூட்டத்திற்குச் சென்ற போது மிகப்பெரிய இளைஞர் கூட்டம் வருகை தந்திருந்தார்கள்.

அமைச்சர்கள் அண்ணன் ரகுபதி, அண்ணன் மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் மிகப் பிரம்மாண்டமான பந்தல் அமைத்து, அந்தச் செயல்வீரர் கூட்டத்தை நடத்திக்காட்டினார்கள்.

நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நம்முடைய பொறுப்பு அமைச்சர்கள் மாவட்ட கழகச் செயலாளர்கள் அந்தக் கூட்டங்களை ஒருங்கிணைத்த விதம் மாநாட்டிற்கான ஒரு ட்ரெய்லர் போல அமைந்தது. அதற்காக அமைச்சர் அண்ணன் மனோ தங்கராஜ், அண்ணன் மகேஷ், ஆவுடையப்பன், அண்ணன் மைதீன் கான், சகோதரர் ராஜா, சகோதரர் ஜெயக்குமார் ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடலூர் மாவட்ட கூட்டத்தை ஒருங்கிணைத்த அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், அண்ணன் கணேசன் அவர்களுக்கும் என் பாராட்டுகள் நன்றி. அரியலூர், பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர் கூட்டத்தை, பெரம்பலூரில் நடத்தியதோடு செயல்வீரர் கூட்டத்திற்கு வந்த ஒவ்வொருவரும் மாநாட்டிற்கும் வருவார்கள் என்று உறுதியளித்து அதை நிறைவேற்றிய அமைச்சர் அண்ணன் சிவசங்கர் அவர்களுக்கும், அண்ணன் ராஜேந்திரன் அவர்களுக்கும் என்னுடைய நன்றி.

### ஆரோக்கியமான போட்டி

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் மாவட்டங்களில் செயல்வீரர் கூட்டங்களை நடத்துவதில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆரோக்கியமான போட்டியைக் காண முடிந்தது.

நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை இளைஞர் அணியில் இருந்து மாவட்டச் செயலாளரான நம் அருமைச் சகோதரர் ராஜேஷ்குமார் அவர்களும் மதுரா செந்தில் அவர்களும் நம் இளைஞர் அணியின் தலைமையகம் `அன்பகம்' வடிவில் அரங்கத்தை அமைத்திருந்தார்கள்.

திருப்பூரில் அமைச்சர் வெள்ளக்கோயில் சாமிநாதன் அவர்களும் அண்ணன் செல்வராஜ் அவர்களும் அண்ணன் இல.பத்மநாதன் அவர்களும் கலைஞரின் கோபாலபுரம் இல்லத்தைப் போன்று அரங்கத்தை வடிவமைத்து சிறப்பித்தார்கள்.

### `நீட் விலக்கு நமது இலக்கு' எனும் கையெழுத்து இயக்கம்!

மாநாட்டு நிதி மட்டுமல்ல, நாம் தொடங்கிய `நீட் விலக்கு நமது இலக்கு' எனும் கையெழுத்து இயக்கத்திலும் நீங்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டீர்கள். ஒரு பக்கம் மாநாட்டு நிதி அளிப்பு, இன்னொருப் பக்கம் `நீட் விலக்கு நமது இலக்கு' அஞ்சல் அட்டையில் கையெழுத்தையும் பெற்றுக்கொண்டு வந்து, என்னை சந்தித்து கையெழுத்துகளை எல்லாம் ஒப்படைத்தீர்கள்.

இளைஞர் அணி மாநாட்டை, பட்டிதொட்டி எங்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று, கன்னியாகுமரியிலிருந்து ஒரு `இருசக்கர வாகன பேரணி'யை `டி.எம்.கே ரைடர்ஸ்' என்ற பெயரில் ஒரு பேரணியை ஆரம்பித்து, அந்தப் பேரணியில் ஆக்கபூர்வமாகப் பங்கேற்று, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அந்த இருசக்கர வாகன பேரணி செல்லும்போது அவர்களை எல்லாம் வரவேற்று உபசரித்து வழி அனுப்பி வைத்தீர்கள்.

### சிறப்பாகத் திட்டமிட்டு அழைத்து வந்திருந்தீர்கள்!

மாநாட்டின் ஏற்பாட்டுக்காக, உங்கள் மாவட்டங்களில் எல்லாம் அடிக்கடி கூட்டங்களை ஏற்பாடு செய்து, எப்படி மாநாட்டுக்கு வர வேண்டும் எத்தனை பேரை நாம் அழைத்துக் கொண்டு வரப் போகிறோம், என்பதையெல்லாம் முறையாக திட்டமிட்டு, எத்தனை பஸ் எத்தனை வேன் எத்தனை கார் என்பதையெல்லாம் தொடக்கம் முதலே நீங்கள் சிறப்பாகத் திட்டமிட்டு அழைத்து வந்திருந்தீர்கள். என்னைப் பார்க்கும் போதெல்லாம் மாநாட்டைப் பற்றி, நீங்கள் விசாரித்துக்கொண்டே இருந்தீர்கள். கூடவே நீங்கள் செய்யும் பணிகளையும் அவ்வப்போது விளக்கிக் கொண்டே இருந்தீர்கள்.

``எங்கள் மாவட்டத்தில் இருநூறு பஸ்கள் சொல்லி இருக்கிறோம். எங்கள் மாவட்டத்தில் 2,000 டீசர்ட்டுகள் சொல்லி இருக்கிறோம். எங்கள் மாவட்டத்தில் 3,000 டீசர்ட்கள் சொல்லி இருக்கிறோம்" என நீங்கள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் அடிக்கடி நீங்கள் சொல்லி வந்தது, எனக்கு மிகப்பெரிய உத்வேகத்தை தந்தது.

இளைஞர் அணியின் சார்பாக நாங்கள் 2 லட்சம் டிசர்ட்டுகளுக்கு தனியாக ஆர்டர் கொடுத்திருந்தோம். ஆனால், நீங்கள் தனியாக மூன்று லட்சம் பேருக்கு டீ சர்ட்களுக்கு ஆர்டர் கொடுத்து, இளைஞர்கள் அத்தனை பேரையும் அழைத்து வந்திருந்தீர்கள். எவ்வளவு பேர் வருவார்கள் என்று. நாம் நினைத்துக் கொண்டிருந்தபோது சுமாராக 2 லட்சம் டிசர்ட்டுகள் அடித்தால் போதுமானது என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். மாவட்டக் கழகச் செயலாளர் அந்த பட்டியலைக் கொடுத்தபோது நாங்கள் வியந்து போய் கேட்டோம்.

அதன்படி மாவட்டம், நகரம், பகுதி, பேரூர், ஒன்றியம், ஊர்க்கிளை என 5 லட்சம் டிசர்ட்களை வேண்டுமென்றும் அவற்றின் சைஸ் பட்டியலோடு சேர்த்து கொடுத்திருந்தீர்கள். இதை ஏன் நான் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால், அந்த அளவுக்கு நீங்களும் நானும் இவற்றைப் பார்த்துப் பார்த்து நேர்த்தியாக செய்திருந்தோம்.

### `எப்போது நடத்தினாலும், அதை வெற்றியோடு நடத்துவோம்'

மிக்ஜாம் புயல், அதைத் தொடர்ந்து தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் புயல் வெள்ள பாதிப்பினால் இரண்டு முறை மாநாடு தள்ளிப்போனது. தேதி மாற்றப்பட்டாலும், `மாநாட்டை எப்போது நடத்தினாலும், அதை வெற்றியோடு நடத்துவோம்' என்பதை நாம் சாதித்து காட்டி இருக்கின்றோம். இன்னும் சொல்லப்போனால், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். அந்த நாளுக்கு முதல் நாள்தான் சென்னையில் மிக்ஜாம் புயல் பாதிப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி, திருநெல்வேலி வெள்ள பாதிப்பு மற்றும் இயற்கை சீற்றத்தால், சிவகங்கை மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் ஏற்பாடு செய்த நிலையில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி இருந்தால், எந்த அளவு இளைஞர்கள் வந்திருப்பார்களோ அதே அளவு கூட்டம் வந்திருந்தார்கள். அதற்கு அண்ணன் பெரிய கருப்பன் அவர்களுக்கும் அண்ணன் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாடு நடைபெற்ற ஜனவரி 21ஆம் தேதி முகூர்த்த நாள். ஏற்கனவே மாநாடு இரண்டு முறை தள்ளிப் போயிருந்தது. ஹோட்டல்களில் அறைகளைப் பிடிப்பது மிக மிக சிரமமான காரியமாக இருந்தது என்பதை நான் அறிவேன். அந்த சூழலில், திருமண மண்டபங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் கழகத்தினரின் வீடுகளில் கூட்டம் கூட்டமாக, குடும்பம் குடும்பமாக தங்கி இருந்து மாநாட்டை சிறப்பாக நடத்தினோம்.

### மாநில உரிமை மீட்பு சுடர் ஓட்டம்

மண்டபம், கல்விக் கூடங்களில் இடம் கிடைக்காதபொழுது தோப்புகளிலும், வயல்வெளிகளிலும் டென்ட் போட்டு மாநாட்டிற்கு வந்த இளைஞர்களையெல்லாம் தங்க வைத்து அழைத்து வந்திருக்கிறீர்கள். குறிப்பாக, பொங்கல் பண்டிகை முடிந்து இரண்டு ஒரு நாள்களில் மாநாடு என்ற நிலை. அப்பொழுது சென்னையிலிருந்து மாநில உரிமை மீட்புச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தோம்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அண்ணன் சேகர் பாபு அவர்களும், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு எனப் பலரும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்று அந்தச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்தச் சுடர் ஓட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம் வழியாக சேலம் வந்தடைந்தது. அந்தச் சுடர் ஓட்டத்தைச் சிறப்பாக வரவேற்று, வழிநடத்திய அத்தனை மாவட்டச் செயலாளர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி மாநாடாக்கிய மாவட்டச் செயலாளர்களின் உழைப்பை என் வாழ்நாள் முழுவதும் நான் மறக்க மாட்டேன்.

இப்படி மாநாட்டின் வெற்றிக்கு ஒவ்வொரு விஷயத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு அதனை மாபெரும் வெற்றி மாநாடாக்கிய மாவட்டச் செயலாளர்களின் உழைப்பை என் வாழ்நாள் முழுவதும் நான் மறக்க மாட்டேன். மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்களைப் பற்றி நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

ஏனென்றால், தொடர்ந்து ஏழு, எட்டு மாதங்களாக மாநாட்டை நடத்த வேண்டும், இளைஞர் அணி மாநாட்டை நடத்த வேண்டும் அதை மதுரையில்தான் நடத்த வேண்டும் என்று மிகவும் பிடிவாதமாக இருந்தவர்தான் அண்ணன் மூர்த்தி அவர்கள்.

மாநாடு சேலத்தில் நடைபெற்றாலும், மதுரையில் நடைபெறுகின்ற அதே உணர்வோடுதான் பல்வேறு பணிகளை மேற்கொண்டார் அண்ணன் மூர்த்தி. அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநாடு சார்ந்த செய்திகளைச் சமூக வலைதளங்களில் கொண்டு சேர்த்த கழகத்தின் ஐ.டி.விங் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாநாடு முடிந்தது, கிளம்பினோம் என்று இல்லாமல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களை, தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்க்கும் விதமாகத் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டங்களையும் நீங்கள் சிறப்பாக நடத்தி வருகிறீர்கள்.

அடுத்து நம் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் வர இருக்கின்றது. எனவே தெருமுனைக் கூட்டங்களை நடத்துங்கள். தலைவர் அவர்களின் தலைமையிலான கழக அரசின் சாதனைகள், ஒன்றிய அரசு செய்த துரோகங்களைத் தெருமுனை கூட்டங்களில் பேசினால் பிரச்சாரத்திற்கு அது மிகவும் உதவிகரமாக இருக்கும். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

### மிக முக்கியமான தேர்தல்

மாநாட்டின் வெற்றி 50 சதவிகிதம்தான். மீதமுள்ள 50 சதவிகிதம் வெற்றி என்பது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் 40க்கு 40 கண்டிப்பாக ஜெயித்தாக வேண்டும். அப்பொழுதுதான் மாநாடு 100 சதவிகித வெற்றியை அடையும். இந்தத் தேர்தல் ஏதோ ஒரு சாதாரண தேர்தல் கிடையாது. பிரதமரைத் தேர்ந்தெடுக்கினற தேர்தல் என்று நாம் அலட்சியமாக இருந்திடக்கூடாது.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்க, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான மிக, மிக முக்கியமான தேர்தல். நமக்குச் சாதகமான ஒரு ஒன்றிய அரசு அமைந்தால்தான் நம் நாட்டுக்கும், நம் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஒரு விடிவு காலம் பிறக்கும். நம் உரிமைகளை மீட்க முடியும். அதன் மூலம் 2026இல் மீண்டும் நாம் ஆட்சி பெறுவதை மீண்டும் நாம் உறுதி செய்தாக வேண்டும்.

கடந்த வாரம் 16ஆம் தேதி, 17ஆம் தேதி, 18ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மக்களவைத் தொகுதி வாரியாக உரிமைகளை மீட்க தலைவரின் குரல் எனப் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களையே மிகப்பெரிய ஒரு மாநாடு போல் நடத்தி காட்டிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### மனக்கசப்புகளை விடுப்பீர்!

நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். கருத்து வேறுபாடுகள் மனக்கசப்புகள் மனமாச்சரியங்களை விடுத்து நாம் அடுத்து வருகின்ற நாட்களில் ஒற்றுமையோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இளைஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த மாவட்டங்களில் நீங்க சொல்கின்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தயாராகக் களத்தில் இருக்கின்றார்கள். அவர்களை நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், வழிநடத்துங்கள்.

இன்னொரு முக்கியமான வேண்டுகோள் இல்லந்தோறும் இளைஞர் அணியை இன்னும் வேகம் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களை வந்து சந்தித்து அதற்கான பணிகளை நான் ஈடுபட அவர்களை அறிவுறுத்திருக்கின்றேன். டார்கெட் எதுவும் கிடையாது இலக்குக் கிடையாது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஏறி, இறங்கி இளைஞர் அணி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பது மட்டும்தான் ஒரே டார்கெட்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வளர்ப்புகள் நாம். கழகத் தலைவரின் வழித்தோன்றல் நாம். ஆகவே நாடும் நமதே நாற்பதும் நமதே என்கிற வகையில், வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை நம் தலைவரின் கரங்களில் நாம் சமர்ப்பிக்க வேண்டும். 2021இல் அடிமைகளை வீழ்த்தி, தமிழ்நாட்டுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் விடியலைத் தந்தார்கள். இப்போது வருகின்ற இந்தத் தேர்தலில் அடிமைகளை விரட்டுவோம்.

2024ஆம் ஆண்டுத் தேர்தலில், வருகின்ற இந்தத் தேர்தலில் அடிமைகளின் முதலாளிகள் ஓனர்ஸ், ஏஜென்சியையும் பாசிஸ்ட்டுகளையும் வீழ்த்தி, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் நாம் தான் தரவுள்ளோம். பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பேசினார்.

### நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்

இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, பொன்முடி,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன்,

இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா.ரகு, இளையராஜா, மாலிக், பிரகாஷ், பிரபு, ஜி.பி.ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எபினேசர், பிரபாகர் ராஜா, பிரகாஷ், ராஜா அன்பழகன், லோகேஷ் ஆர்.டி.மதன்குமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.2.2024) முகாம் அலுவலகத்தில், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி அன்னா ஜெர்டே (Ms. Anna Bjerde) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தெற்காசிய மண்டல துணைத் தலைவர் மார்டின் ரைசர், சர்வதேச நிதி நிறுவன Country Manager வெண்டி வெர்னர் (Ms. Wendy Werner), உலக வங்கியின் பங்கு நிதி நிறுவனங்களின் திட்டத் தலைவர் (Equity Finance Institutions, Program Leader) பாவ்னா பாட்டியா, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் டி. ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, பிப். 25-**

**திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகிற சாலையில், ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இரயில்வே பாலம் கட்டப்படும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**தங்கமணி:** திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகின்ற சாலையில் இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றது. இப்பொழுது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. எடப்பாடியார் முதலமைச்சராக இருக்கின்றபோது, ரூபாய் 70 கோடிக்கு நிதியை ஒதுக்கியிருந்தார்கள். 3 ஆண்டு காலமாக நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். நிதியமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக சொல்லியிருந்தார்கள். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். விரைந்து செய்தால் மக்களுடைய பயன்பாட்டுக்கு எளிமையாக இருக்குமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக, காவிரி ஆற்றில் இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினால் ...

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய உறுப்பினர் அவர்கள்சொன்னதிருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையானது சுமார் 23 கிலோ மீட்டர் நீளமுள்ள ஓர் மாவட்டச் சாலையாகும். அந்த சாலையில்தான் 119, 119A என்ற இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றன. நீங்கள் தொடர்ந்து கேட்ட அடிப்படையில் தான் அதற்கு முன்னுரிமை கொடுத்து, செறிவுகளை எடுத்து பார்க்கிறபொழுது, 22 ஆம் தேதியில் 119ல் இரயில்வே கடவுகளின் அலகு 1,20,000 போக்குவரத்து செறிவும், 119Aல் 1,22,550 செறிவும் இருப்பதை கருத்தில்கொண்டுதான், DPR ரூபாய் 77 கோடிக்கு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அதற்கு tender போடும் நிலைக்கு வந்திருக்கிறோம். அதனால் நீங்கள் கேட்ட கேள்விற்கு இந்த அரசு மரியாதை கொடுத்துத்தான் இந்தப் பணிகள் நடைபெறுகிறது. அதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ROB பாலம் அந்த இடத்தில் கட்டப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் இரயில்வே கடவுச்சாலை மேம்பாலஅடிக்கல் நாட்டு விழா தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு இப்பணிக்கு அடிக்கல் நாட்டிபேசினார். எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக்குழு தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், பேரூராட்சி மன்ற தலைவர் ஆர்.ஆர்.ராமராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.











கலைஞர் 100
1924 - 2023
தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம்
சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார்
408 ஏக்கரில், 2500 பேர் பணிவாய்ப்பு பெறும் வகையில்,
16500 கோடி ரூபாய் முதலீட்டில் வின்பாஸ்ட் (VINFAST)
ஆட்டோ லிமிடெட் நிறுவனம் தொடங்குவதற்கான அடிக்கல்
நாட்டு விழாவில் கலந்து கொள்ளவும்
சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமழை
மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
வீடு கட்டுவதற்கும், பராமரித்திடவும் நிதியுதவி
பயிர்களுக்கான நிவாரணத் தொகை
மீனவர்களுக்கான படகு மற்றும்
வலைகளுக்கான நிவாரணத் தொகை
சிறு வணிகர்களுக்கு குறைந்த
வட்டியில் கடனுதவி வழங்கிட
25.02.2024 அன்று
தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தரும்
“வறுமை ஒழிப்புத் திட்டம்”
தந்திட்ட எங்கள் தாயுமானவரே!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்கும்
பி.கீதாஜீவன் M.Com.,B.Ed.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க


நாள் : 25.02.2024
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
தூத்துக்குடி மாவட்டத்தில்
பெருவெள்ளம், அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு
நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கவும்
தூத்துக்குடியின் பெரு வளர்ச்சிக்கு ரூ. 16,000 கோடி முதலீட்டில்
வின்ஃபாஸ்ட எலக்ட்ரிகல் கார் தயாரிப்பு தொழிற்சாலைக்கு
அடிக்கல் நாட்டுவதற்கும் வருகை தரும்
கழகத் தலைவர்
திராவிட மாடல் ஆட்சியின் நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் வரவேற்கும்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
செயலாளர் – தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.
மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
ARASU ARTS


கலைஞர் 100
1924 - 2023
தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம்
சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார்
408 ஏக்கரில், 2500 பேர் பணிவாய்ப்பு பெறும் வகையில்,
16500 கோடி ரூபாய்முதலீட்டில் வின்பாஸ்ட் (VINFAST)
ஆட்டோ லிமிடெட் நிறுவனம்
தொடங்குவதற்கான அடிக்கல்
நாட்டு விழாவில் கலந்து கொள்ளவும்.
சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமழை
மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
வீடு கட்டுவதற்கும், பராமரித்திடவும் நிதியுதவி
பயிர்களுக்கான நிவாரணத் தொகை
மீனவர்களுக்கான படகு மற்றும்
வலைகளுக்கான நிவாரணத் தொகை
சிறு வணிகர்களுக்கு குறைந்த
வட்டியில் கடனுதவி வழங்கிட
25.02.2024 அன்று
தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் வரவேற்கும்
ஜெகன் பெரியசாமி
மேயர் – தூத்துக்குடி மாநகராட்சி – தலைமை செயற்குழு உறுப்பினர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க



கும்பகோணம் மாநகராட்சியில்
கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2023- 24)
பழைய பேருந்து நிலையம்
ரூ.22.69 கோடி
மதிப்பீட்டில் வணிக வளாகம்
மூலதன மானிய நிதி (2023- 24)
பழைய மீன் மார்க்கெட்
ரூ.10.70 கோடி
மதிப்பீட்டில் வணிக வளாகம்
ஆகிய திட்டங்களில் மூலம் கட்டப்படும் கட்டிடங்களுக்கு
காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டும்...
மாண்புமிகு கழகத்தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
நன்றி! நன்றி! நன்றி!
குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி
தலைமை செயற்குழு உறுப்பினர்
தலைவர், பொதுசுகாதாரக்குழு - கும்பகோணம் மாநகராட்சி




நாள் : 25.02.2024
காலை 11.00 மணி
கழகத்தலைவர்
மாண்புமிகு
தமிழக முதல்வர்
அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும்
நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து
மாநில வர்த்தக அணி செயலாளர்
கவிஞர் காசி முத்துமாணிக்கம்
அவர்கள் தலைமையில் நடைபெறும் ஆலோசனைக்
கூட்டத்திற்கு வருகை தரும் மாநில, மாவட்ட,
மாநகர வர்த்தக அணி அமைப்பாளர், நிர்வாகிகள்
அனைவரையும் வருக! வருக!! என
வணங்கி வரவேற்கும்....
S.வரதராஜன் (SVR)
அமைப்பாளர் திருச்சி மாநகர வர்த்தக அணி (மேற்கு)

வேலூர் நாகநதி கிராமத்தில் எருது விடும் விழாவில்

# உயிரிழந்த ராம்கி குடும்பத்திற்கு இரங்கல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 25– வேலூர் மாவட்டம் நாகநதி கிராமத்தில் நடைபெற்ற எருது விடும் விழாவில் நிகழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்தும் நிதியுதவி – அறிவித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் அறிவிப்பு வருமாறு:

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கணியம்பாடி உள்வட்டம், நாகநதி கிராமத்தில் நேற்று (23.02.2024) நடைபெற்ற எருது விடும் விழாவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த சம்பவத்தில் வேலூர் வட்டம், அரியூர் மதுரா திருமலைக்கோடியைச் சேர்ந்த ராம்கி (வயது 24) த/பெ.சுப்பன் என்பவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில், உயிரிழந்த ராம்கி என்பவரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஊட்டியில் நடைபெற்ற ‘கலைச் சங்கமம்’ நிகழ்ச்சியில் பங்கேற்ற

# 4 குழுக்களுக்கு தலா ரூ.30 ஆயிரத்திற்கான காசோலை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

ஊட்டி, பிப்.25- நீலகிரி மாவட்டம், ஊட்டி பழங்குடியினர் பண் பாட்டு மையத்தில், தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில், முத்தமிழறிஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் நடை பெற்ற கலைச்சங்கமம் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச் சந் திரன் நேரில் பார்வையிட் டார். இந்நிகழ்ச்சியில் தெரி வித்ததாவது

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தமிழ்நாடு அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத் தில், 1973 ம் ஆண்டில், முத்தமிழறிஞர் கருணாநிதியால் தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை, நாடக மன்றத்திற்கு வழங் கப்பட்டுவந்த நிதி ஒதுக் கீட் டினை ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கியதுடன் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களுக்கு வழங்கப் பட்டு வந்த பொற்கிழித் தொகையினை ரூபாய் 50 ஆயிரத்தில் இருந்து ரூபாய் ஒரு லட்சமாகவும், கலை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தமிழகக் கலைக் குழுக்களை அயல் மாநிலங்களுக்கு அனுப்பிட வழங்கப் பட்டு வந்த நிதிநல்கையை ரூ.15 லட்சத்திலிருந்து ரூ.50 லட் சம் ஆக உயர்த்தியும், கிராமி யக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிக லன்கள் மற் றும் கலைப் பொருட்கள் வாங்கிட வழங் கப்பட்டு வந்த நிதியுதவியை ரூ.10 ஆயிரம் ஆக உயர்த்திடவும் ஆண்டுதோறும் 500 கலைஞர்களுக்கு வழங்கிடவும் உத்திரவிட்டுள்ளார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை 35 மாவட்டங்களில் கொண் டாடும் வண்ணம், தமிழ் நாடு அரசு உத்தரவின்படி, 35 மாவட்டங்களில் நடத் திட ஏற்பாடு செய்யப் பட்டு, 16.02.2024 முதல் 23.02.2024 வரை கிராமியக் கலை

நிகழ்ச்சிகள் ‘கலைச் சங்க மம்” விழாவாக நடத் தப் பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (நேற்று) நமது மாவட்டத் தில் பழங்குடியினர் மற்றும் கிரா மிய கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இம்மன்றத்தின் சார்பில், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந் தோறும் நிதியுதவியாக ரூ.3,000மும், மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம் திட்டத்தின் கீழ்கலை குழுக்கள் மூலம் பல் வேறு மாநிலங்களுக்கு கலைநிகழ்ச்சிகள் பரிமாற் றம் செய்தலும் புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்ப ங்களுக்குக் குடும் பப் பராமரிப்பிற்காக தற் பொழுது ரூ.25,000ம் நிதியு தவி யும் உள்ளிட்ட செயல்பாடுக ளும் நடை பெற்று வருகிறது. மேலும், நாட்டுப்புற கலை ஞர்க ளுக்கும், கலைக்குழுக் களுக்கும் இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் மற் றும் கலைப் பொருட்கள் வாங்கிட ரூ.10,000 தொகை நிதியுதவியும், தமிழில் அரும்பெரும் கலை நூல் களை வெளியிட நூலாசிரியர்களுக்கு தலா ரூ.2,00,000 நிதியுதவியும் வழங்குதலும், அயல் நாடுகளில் தமிழகக் கலைகளைக் கொண்டு செல்லுதலும், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலைகளை இளைய தலைமுறையினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல் போன்ற திட்டங்களை செவ்வன செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் விஜ யசாந்தி குழுவினரின் தோடா நடனம், புஷ்பகுமார் குழுவினரின் கோத்தர் நட னம், ஆர்த்தி குழுவினரின் கரகம், காவடி, நையாண்டிமேளம், கணேசன் குழுவினரின் ஜிக்காட்டம், துடும் பாட் டம் உள்ளிட்ட கலைநிகழ் சிகளை நடத்திய 4 குழுவினர்களுக்கு பொன்னாடை அணிவித்து தலா ரூ. 30,000க் கான காசோலையினைவழங்கி பாராட்டினார்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், ஊட்டி வருவாய் கோட் டாட்சியர் மக ராஜ், நகர மன்றத்தலைவர் வாணீஸ் வரி, துணைத்தலை வர் ரவிக்குமார், ஊராட்சி ஒன் றியத்தலைவர் மாயன் (எ) மாதன், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் ஜார்ஜ் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற மாவட்ட ஒருங் கிணைப்பாளர் சோமசுந்த ரம், விழா ஒருங் கிணைப்பா ளர் கலைவ ளர்மணி ராஜ்கு மார் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச்செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர், பிப். 25- திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம் , திருவாரூர் தெற்குவீதி ஏ. கே.எம். திருமண அரங்கில் இன்று (ஞாயிற்றுக்கிழமை - 25.02.2024)காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.

எனவே திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாகநிலை முகவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :மார்ச் 1 இளைஞர் எழுச்சிநாள்

நாடாளுமன்றத் தேர்தல் பணிகள்

கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

# நாடாளுமன்ற தேர்தல் களப்பணி குறித்து பேரூராட்சி - ஊராட்சி வாரியாக ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆலோசனைபடியும் மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களில் ஊராட்சி வாரியாகவும், பேரூராட்சிகளில் வாக்குச்சாவடி வாரியாகவும் ஆய்வுக்கூட்டம் நடைபெறும்.

**பேரூராட்சி, ஊராட்சி வாரியாக ஆய்வுக் கூட்டம்**
**(முதல் சுற்று)**

| வ. எண் | நாள் | நேரம் | கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஊராட்சிகள் | கூட்டம் நடைபெறும் இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | 27.02.2024 செவ்வாய் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.திப்பிரெட்டிஅள்ளி 2.கொண்டகரஅள்ளி 3.கோடுஅள்ளி 4.வே.முத்தம்பட்டி | மணிபுரம் திருமண மண்டபம். | திரு. K.P.சக்திவேல் ஒன்றிய கழக செயலாளர் தருமபுரி கிழக்கு |
| 2 | | பகல் 12.00 முதல் 1.00 வரை | 1.பொ.மல்லாபுரம் பேரூராட்சி (12 வாக்குச் சாவடிகள்) | G.P.S மஹால் பொ.மல்லாபுரம் | திரு. K.கௌதமன் பேரூர் கழக செயலாளர் பொ.மல்லாபுரம் |
| 3 | | பிற்பகல் 2.00 முதல் 3.30 வரை | 1. பொம்மிடி 2. பி.பள்ளிப்பட்டி 3. பையர்நத்தம் 4. போதக்காடு | அண்ணா திருமண மண்டபம், பி.பள்ளிப்பட்டி | திரு. B.S.சரவணன் ஒன்றிய கழக செயலாளர் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு |
| 4 | | பிற்பகல் 4.00 முதல் 6.00 வரை | 1.அதிகாரப்பட்டி 2.அ.பள்ளிப்பட்டி 3.இருளப்பட்டி 4.மூக்காரெட்டிப்பட்டி 5.புதுப்பட்டி 6.பாப்பம்பாடி | கலைஞர் அரங்கம், இருளப்பட்டி | திரு.C.முத்துக்குமார் ஒன்றிய கழக செயலாளர் பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு |
| 5. | 28.02.2024 புதன் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.தென்கரைக்கோட்டை 2.கோபிசெட்டிப்பாளையம் 3.இராமியணஅள்ளி 4.கர்த்தானூர் 5.தாதனூர் 6.குருபரஅள்ளி | திருமண மண்டபம், கர்த்தானூர் | திரு.T.நெப்போலியன் ஒன்றிய கழக செயலாளர் கடத்தூர் கிழக்கு |
| 6. | | பகல் 11.30 முதல் 1.30 வரை | 1.மணியம்பாடி 2.ஒசஅள்ளி 3.நல்லகுட்லஅள்ளி 4.ஒபிளிநாயக்கனஅள்ளி 5.லிங்கநாய்க்கனஅள்ளி 6.மடதள்ளி | MCS மஹால், கடத்தூர் | திரு. R.சிவபிரகாசம் ஒன்றிய கழக செயலாளர் கடத்தூர் மேற்கு |
| 7. | | பிற்பகல் 2.30 முதல் 4.00 வரை | 1.மூக்கனூர் 2.அக்கமனஅள்ளி 3.நாயக்கனஅள்ளி 4.குப்பூர் | திருமண மண்டபம், A.நடுஅள்ளி | திரு.N.A.மாது ஒன்றிய கழக செயலாளர் தருமபுரி வடக்கு |
| 8. | | மாலை 5.00 முதல் 6.00 வரை | 1.கடத்தூர் பேரூராட்சி (10 வாக்குச்சாவடிகள்) | MCS மஹால், கடத்தூர் | திரு.D.மோகன் பேரூர் கழக செயலாளர் கடத்தூர் |
| 9. | 03.03.2024 ஞாயிறு | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.கோபாலபுரம் 2.ஜம்மனஅள்ளி 3.பறையப்பட்டிபுதூர் 4.H.கோபிநாதம்பட்டி 5.கொக்கராப்பட்டி 6.சின்னாங்குப்பம் | கொங்கு திருமண மண்டபம், H.கோபிநாத ம்பட்டி | திரு.வே.சௌந்தரராசு ஒன்றிய கழக செயலாளர் அரூர் மேற்கு |
| 10. | | பகல் 11.30 முதல் 12.30 வரை | 1.அரூர் பேரூராட்சி (13 வாக்குச்சாவடிகள் 206 முதல் 218) | பொன்கற்பகம் மண்டபம், அரூர் | திரு.முல்லை ரவி பேரூர் கழக செயலாளர் அரூர் |
| 11. | 03.03.2024 ஞாயிறு | பிற்பகல் 2.00 முதல் 3.30 வரை | 1.சிட்லிங் 2.கோட்டப்பட்டி 3.பெரியப்பட்டி 4.நரிப்பள்ளி 5.பையர்நாய்க்கன்பட்டி | R.V.மண்டபம் நரிப்பள்ளி | திரு.கோ.சந்திரமோகன் ஒன்றிய கழக செயலாளர் அரூர் கிழக்கு |
| 12. | | மாலை 4.00 முதல் 6.00 வரை | 1.கொங்கவேம்பு 2.K.வேட்ரப்பட்டி 3.கீழ்மொரப்பூர் 4.மாம்பட்டி 5.வடுகப்பட்டி | குமுதம் மஹால் H.ஈச்சம்பாடி | திரு.R.வேடம்மாள் ஒன்றிய கழக செயலாளர் அரூர் வடக்கு |
| 13. | 04.03.2024 திங்கள் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.தாசிரஅள்ளி 2.மொரப்பூர் 3.நவலை 4.இராணிமூக்கனூர் 5.கெரகோடஅள்ளி | R.V.R திருமண மண்டபம் மொரப்பூர் | திரு. ETT.செங்கண்ணன் ஒன்றிய கழக செயலாளர் மொரப்பூர் கிழக்கு |
| 14. | | பகல் 12.00 முதல் 01.30 வரை | 1.இருமத்தூர் 2.பன்னிகுளம் 3.வகுரப்பம்பட்டி 4.கொங்கரப்பட்டி | இலட்சுமி நாராயணா திருமண மண்டபம் கம்பைநல்லூர் | திரு. மா.ரத்தினவேல் ஒன்றிய கழக செயலாளர் மொரப்பூர் மேற்கு |
| 15. | | பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | 1.கம்பைநல்லூர் பேரூராட்சி (11 வாக்குச்சாவடிகள்) | இலட்சுமி நாராயணா திருமண மண்டபம் கம்பைநல்லூர் | திரு.E.மோகன் பேரூர் கழக செயலாளர் கம்பைநல்லூர் |
| 16. | | மாலை 4.30 முதல் 6.00 வரை | 1.காரிமங்கலம் பேரூராட்சி (12 வாக்குச்சாவடிகள்) | மாவட்ட கழக அலுவலகம் காரிமங்கலம் | திரு.K.V.K.சீனிவாசன் பேரூர் கழக செயலாளர் காரிமங்கலம் |
| 17. | 05.03.2024 செவ்வாய் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.கெரகோடஹள்ளி 2.பந்தரஅள்ளி 3.அடிலம் 4.பெரியாம்பட்டி | P.M குப்புசாமி திருமண மண்டபம், பெரியாம்பட்டி | திரு. T.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் கிழக்கு |
| 18. | 05.03.2024 செவ்வாய் | பகல் 11.30 முதல் 01.30 வரை | 1.கும்பாரஅள்ளி 2.பொம்மஅள்ளி 3.மொட்டலூர் 4.திண்டல் | மாவட்ட கழக அலுவலகம் காரிமங்கலம். | திரு. L.கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் மத்தியம் |
| 19. | | பிற்பகல் 2.30 முதல் 04.00 வரை | 1.ஜிட்டாண்டஅள்ளி 2.மகேந்திரமங்கலம் 3.ஜக்கசமுத்திரம் 4.பிக்கனஅள்ளி | நல்லி மஹால் திருமண மண்டபம், மல்லுப்பட்டி | திரு.M.V.T.கோபால் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் மேற்கு |
| 20 | 06.03.2024 புதன் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.A.மல்லாபுரம் 2.பெலமாரணஅள்ளி 3.கணபதி 4.பேவுஅள்ளி 5.நல்லூர் | திருமண மண்டபம், கரகூர் | திரு.S.முனியப்பன் ஒன்றிய கழக செயலாளர் பாலக்கோடு மத்தியம் |
| 21. | | பகல் 11.30 முதல் 01.30 வரை | 1.பஞ்சபள்ளி 2.கும்மனூர் 3.சூடனூர் 4.சாமனூர் 5.சிக்கதோரணபெட்டம் | சபரி மஹால், மாரண்டஅள்ளி | திரு. P.K.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் பாலக்கோடு மேற்கு |
| 22. | | பிற்பகல் 02.00 முதல் 03.00 வரை | 1.மாரண்டஅள்ளி பேரூராட்சி (8 வாக்குச்சாவடிகள்) | சபரி மஹால், மாரண்டஅள்ளி | திரு.M.A.வெங்கடேசன் பேரூர் கழக செயலாளர் மாரண்டஅள்ளி |
| 23. | | மாலை 04.00 முதல் 06.00 வரை | 1.பாலக்கோடு பேரூராட்சி (16 வாக்குச்சாவடிகள்) | நந்தா பேலஸ், பாலக்கோடு | திரு. P.K.முரளி பேரூர் கழக செயலாளர் பாலக்கோடு |

**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.முக.



# இயற்கை எய்தினார்

முத்தூர் **பேங்கர் சாமியப்ப கவுண்டர்** மகனும்
முத்தூர் பங்களா தோட்டம்

## மு.பெ.கிருஷ்ணகுமார்,

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

## மு.பெ.சாமிநாதன்

ஆகியோரின் தந்தையுமான

## திரு. சா.பெருமாள்சாமி கவுண்டர்

அவர்கள்

23-02-2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகன் – மருமகள்
**மு.பெ.கிருஷ்ணகுமார்**
**கி.உமா**

பேத்தி :
**ஆர்த்தி - ஆதவன்**

மகள் – மருமகன்
**தனலட்சுமி - தமிழ்செல்வன்**

பேரன் :
**மகேஷ்குமார்-வினு கீர்த்தனா**

கொள்ளுப் பேத்தி : **ஆரியா**

மகன் – மருமகள்
**மு.பெ.சாமிநாதன்**
**சா.உமாதேவி**

பேரன் : **சா.ஆதவன் - ஸ்ரீ நேத்ரா**

கொள்ளுப் பேரன் – கொள்ளுப் பேத்தி
**சமரன் சாமிநாதன்**
**சனா ஆதவன்**


பேத்தி : **சிவசம்யுக்தா- ராகுல்ப்ரித்வி**

கொள்ளுப் பேத்தி :
**ராதே ராகுல்**

திருப்பூர் சம்பந்தி
**சாந்தி ஜெயபிரகாஷ்**

கோவை சம்பந்தி
**மாராத்தாள்**
**ஜெயகுமார் பழனிச்சாமி**
**காந்திமதி - நேகா**

திரு. **சா.பெருமாள்சாமி கவுண்டர்**



# இயற்கை எய்தினார்

முத்தூர் **பேங்கர் சாமியப்ப கவுண்டர்** மகனும்

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

## மு.பெ.சாமிநாதன்

அவர்களின் தந்தை

## திரு. சா.பெருமாள்சாமி கவுண்டர்

அவர்கள்

23-02-2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்

## இல.பத்மநாபன்

செயலாளர், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க
தலைவர் 4ஆம் மண்டலம், திருப்பூர் மாநகராட்சி

## திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக

# தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## மாவட்ட/ மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (ஐந்தாவது பட்டியல்)

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட/மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஜ. சாதிக் பாட்சா, 16, பள்ளி வீதி, கரும்புக் கடை, கோவை 641008.

துணைத் தலைவர் - கி. மனோகரன், 26-1, காந்தி நகர், காரமடை, கோவை 641104.

அமைப்பாளர் - **எஸ். கார்த்திக் குமார்,** 5/299-c ஆசிரியர் காலனி, கணுவாய், அஞ்சல் அலுவலகம் அருகில், கோவை 641108.

துணை அமைப்பாளர்கள் - டேவிட் பீட்டர், 15/16 தியாகராஜ, நகர் சுண்டக்காமுத்தூர், கோவை 641010. வி. பிரபாகரன், 10, அம்பிகா நகர், துடியலூர், கோவை. வி. பிரகாஷ், 177, குன்னத்தூர், குன்னத்தூர் புதூர் (po), S.S. குளம் (via), கோவை 641107. இரா. திலீப் குமார், 5/44 தேக்கம்பட்டி, சீளியூர் (வழி), மேட்டுப்பாளையம், கோவை 641113. சே. முகம்மது ரபி, 151, அண்ணாஜிராவ் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை 641301. A. நாகராஜ், 27A, ராமுகுட்டி லே அவுட், கவுண்டம்பாளையம், கோவை-30. திருமூர்த்தி, 2/133A, கோவனூர், நாயக்கன்பாளையம் அஞ்சல், கோவை 20. S.மகேஷ் பிரசாந்த், 2/242, தெற்கு வீதி, சோமையனூர், கோவை. E. ரங்கராஜ், 1/922, மத்தம்பாளையம், பிளிச்சி அஞ்சல், கோவை. குணசேகரன், 3/4, சாலை வேம்பு மேடூர், கெம்மாராம்பாளையம், மேட்டுப்பாளையம், கோவை. ஆர். மனோஜ் குமார், 45/58A அய்யாவு பாண்டி வீதி, சொக்கம்புதூர், கோவை-39. V. செல்வராஜ், 3/113, கிழக்கு வீதி, தொட்டிபாளையம், வெள்ளமடை, கோவை-641110. ந. மனோஜ் பிரபாகர், 10/8, T.V.S. நகர், கவுண்டம்பாளையம், கோவை 30. A. ஆயிஷா அக்பர், 9, ரெயின்போ என்க்கிளைவ், சுகுணாபுரம், கிழக்கு, மயில்கல், குனியமுத்தூர் போஸ்ட், கோயம்புத்தூர்- 641008. S. முகம்மது ரபி, 151, அண்ணா ஜிரா ரோடு, மேட்டுப்பாளையம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - Y. இன்பராஜ், 172/6, வடக்கு தெரு, அலவந்தான்குளம், பல்லிக்கோட்டை அஞ்சல், சங்கர் நகர், திருநெல்வேலி.

துணைத் தலைவர் - ச. முத்துசாமி, 31 பாண்டித்துரை 1வது தெரு, குலவணிகர்புரம், பாளையங்கோட்டை.

அமைப்பாளர் - **பல்க் பி. குமார்,** 275 8வது குறுக்குத் தெரு, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - ஏ. ஜமால் முகைதீன், 9/1ஏ2 வடக்கு பள்ளிவாசல் தெரு, தாழையூத்து. M. கனி(எ) அந்தோனி, 31/166 பள்ளிவாசல் தெரு, தெற்குபட்டி, மானூர். P. அந்தோணி ராஜ், 6/182 ஆதிதிராவிடர் காலனி, புதிய காலனி, களக்குடி, திருநெல்வேலி - 627201. K. அப்துல் மஜீத், 613 கே.ஓ.பி 3வது தெரு, பேட்டை, திருநெல்வேலி. A.முருகன், 204 மதுரை ரோடு, தச்சநல்லூர், திருநெல்வேலி. S.M நிஜாம், 1/124, நடுத்தெரு, குறிச்சிக்குளம். M. அமிதாப், 3, நியூ காலனி, நேரு நகர், பாளையங்கோட்டை.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - மு.க. மாணிக்கம், 39, முத்து விநாயகர் கோவில் தெரு, பணகுடி. துணைத்

தலைவர் - G. அனிராஜ், 5/417, உதிரன்முத்தன்பட்டி சக்திநகர், சிவந்திபுரம், அம்பாசமுத்திரம் தாலுகா.

அமைப்பாளர் - **நா. முருகன்,** 8/223, தெற்கு தெரு, பெட்டைகுளம் அஞ்சல், திசையன்விளை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் 627654.

துணை அமைப்பாளர்கள் - தங்ககிருஷ்ணன், 7/6, நடுத்தெரு, ஆவுடையம்மாள்புரம், விஜயாபதி, இராதாபுரம் 627104. ஆர். முத்துதுரை, 1ஜி, ஆசிரியர் காலனி, 1வது தெரு, அம்பாசமுத்திரம். வி.என். மாயா கிருஷ்ணன், 112, கிருஷ்ணன் கோவில் தெரு, காரங்காடு அஞ்சல், நாங்குநேரி தாலுகா. த. சரவணன், 3/115, முப்புடாதி அம்மன், கோவில் தெரு, பொட்டல், சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம், அம்பாசமுத்திரம் வட்டம். எஸ். முருகையாபாண்டியன், 3/680, பொன்நகர் ரோடு, அகஸ்தியர்பட்டி தாலுகா, அம்பாசமுத்திரம். இ. ஜெயராஜ், 35ஏ, அந்தோணியார் கோவில் தெரு, அகஸ்தியர் தெரு, வி.கே.புரம். ஆ. லெட்சுமணன், 95, இராதாபுரம் ரோடு, வள்ளியூர். எம். ரவி, 5/3 தென்கரை மேற்குதெரு திருக்குறுங்குடி, நாங்குநேரி வட்டம். த. மதிவாணன், 14/1, சின்னம்மாள்புரம் தெரு, பணகுடி. ஞானராஜ், 177/2, மெயின் ரோடு, பரப்பாடி, திருநெல்வேலி. Y. ஏசுதாஸ், வெப்பல்தெரு, முங்கிலடி, களக்காடு. செந்தில் ராஜ், 84, கோவில் தெரு, கருங்கண்ணன் குடியிருப்பு, தளபதி சமுத்திரம், திருநெல்வேலி. K. முருகன், வடக்கு தெரு, கீழபாட்டம்.

**திருப்பத்தூர் மாவட்டம்**

தலைவர் - C.S. பெரியார்தாசன், 77, பார்த்தசாரதி தெரு, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர். துணைத்

தலைவர் - P. கார்த்திக், 7, எம்டிஎன் நகர் மெயின் ரோடு, உமராபாத் அஞ்சல், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர்.

அமைப்பாளர் - M. **சிங்காரவேலன்,** கே.பந்தாரப்பள்ளி அஞ்சல், பச்சூர் வழி, திருப்பத்தூர்.

துணை அமைப்பாளர்கள் - S. அருண்பாண்டியன் அத்தனாவூர் (கி), ஏலகிரி, திருப்பத்தூர். P. நாகராஜன் திருப்பத்தூர். S. ராஜா 51, செட்டித் தெரு, திருப்பத்தூர். G.K. கிருஷ்ணமூர்த்தி 2/66, ஆதியூர், கந்திலி திருப்பத்தூர். J. ஓம் சிவபிரகாஷ் மட்றம்பள்ளி அஞ்சல், திருப்பத்தூர். N. சிவா 76, சர்ச் தெரு, வெங்கடசமுத்திரம் (கி), ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர்.

**திருச்சி தெற்கு மாவட்டம்**
**திருச்சி கிழக்கு மாநகரம்**

தலைவர் - P.V.பூபேஷ் கண்ணன், 3, ராஜப்பா நகர் மேற்கு, ரயில் நகர், அரியமங்கலம், திருச்சி - 10. துணைத்

தலைவர் - MKS. சாகுல் ஹமீது, 5A, கென்னடி தெரு, காமராஜ் நகர், அரியமங்கலம், திருச்சி - 10.

அமைப்பாளர் - N. **ரமேஷ்,** 23, KSJ.காம்ப்ளெக்ஸ், பாலாஜி நகர், மெயின் ரோடு, பாலாஜி நகர், காட்டூர், திருச்சி - 19.

துணை அமைப்பாளர்கள் - R. நாகராஜன், 55, மேட்டு தெரு, மல்லிகை புரம், திருச்சி - 01. K. சந்திர சேகர், 1/8, வைத்தியநாத புரம், கீழகண்டார்கோட்டை, திருச்சி - 11. N. கேசவன், 5/9, கோரிமேட்டு தெரு, கீழ சிந்தாமணி, திருச்சி - 02. பா. பிரபாகரன், 6, பாரதியார் தெரு, விவேகானந்தர் நகர், மே.க. கோட்டை, திருச்சி - 11. S. ஜெயக்குமார், 11, 3வது தெரு, அல்லி தெரு, விவேகனந்தா நகர், பொன்மலை, திருச்சி - 04.

**திருச்சி மத்திய மாவட்டம்**
**திருச்சி மேற்கு மாநகரம்**

தலைவர் - S.M. சுரேந்திரன், 85, தெற்கு 3வது தெரு, கருமண்டபம் திருச்சி-1. துணைத்

தலைவர் - V. மதியழகன், 67F, வைக்கோல்கார தெரு, உறையூர், திருச்சி-3.

அமைப்பாளர் - **தங்கபாண்டியன்,** 24/C, மேலகல்நாயக்கன் தெரு, உறையூர், திருச்சி-3.

துணை அமைப்பாளர்கள் - K. சிவபாலசுப்ரமணியம், நெ.7, வெங்கடேஸ்வரா நகர், T.V. கோவில், திருச்சி. R. அரவிந்தன், 47, தெற்கு முத்துராஜா தெரு, புத்தூர் திருச்சி-17. P. திருவரசு, 2, கம்மாளதெரு, உறையூர், திருச்சி-3. K. செல்வம், 13A, காமாட்சி அம்மன் கோவில் தெரு, கல்லாங்காடு, திருச்சி. S. சரத்குமார், 3/45, கீழ தெரு கொடாப்பு, உய்யகொண்டான், திருமலை, திருச்சி-102.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**
**தூத்துக்குடி மாநகரம்**

தலைவர் - வி. வினோத், 111/88/NA, எழில்நகர், சக்தி விநாயகபுரம். துணைத்

தலைவர் - மா. கனிராஜா, 106, அன்னை வேளாங்கன்னி நகர், கிருஷ்ணராஜபுரம் வடக்கு.

அமைப்பாளர் - **சு. பார்த்தசாரதி,** 53, அம்மன் கோவில் தெரு, பிரையண்ட் நகர், தூத்துக்குடி - 8.

துணை அமைப்பாளர்கள் - அ. மகேஸ்வரன், 136, சுப்பையாபுரம் 4 வது தெரு, தூத்துக்குடி. ஆ. பொன்னுசாமி, 4/52, முத்தம்மாள் காலணி 7 வது தெரு, தூத்துக்குடி - 628002. மு. லாரன்ஸ், 20/1, அழகேசபுரம் 2 வது தெரு, தூத்துக்குடி - 2. A. பரமசிவன், 25/10A, அண்ணா நகர், 12 மேற்கு மங்களபுரம், தூத்துக்குடி - 2. ரா. தங்கராஜ், 1-391-1, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி - 628002.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**
**ஈரோடு மாநகரம்**

தலைவர் - வி. பூபதி, 23/3, ஸ்வஸ்திக் கார்டன், வைராபாளையம் ரோடு, ஈரோடு-3. துணைத்

தலைவர் - ER. அருணகிரி, கணபதிபுரம், ஈரோடு - 3.

அமைப்பாளர் - **கு. இளங்கவி,** 1, கந்தப்ப வீதி, திராவிடர் தோட்டம், ஈரோடு-1.

துணை அமைப்பாளர்கள் - J. குணசேகரன், 43, எ. பி.டி.ரோடு, ஈரோடு-3. K. கார்த்திகேயன், 8/9, குண்டு நாவிதர் வீதி, பி.பெ.அக்ரஹாரம், ஈரோடு-5. கங்கா கண்ணன், 31/1, சின்னமுத்து பெயின் வீதி, இடையன்காட்டு வலசு, ஈரோடு-11. S. குமரன், 15/A, சேரன் நகர், நல்லியம் பாளையம், ஈரோடு-2. M. குணசீலன் முனியப்பன் நகர், காவிரிக்கரை, கருங்கல்பாளையம், ஈரோடு-3.

**சேலம் மத்திய மாவட்டம்**
**சேலம் மாநகரம்**

அமைப்பாளர் - S. **மோகன்,** 33/25 மாரியம்மன் கோயில் தெரு, அரிசிபாளையம், சேலம்-9.

துணை அமைப்பாளர்கள் - பா. முருகதாஸ், 8/10 இராஜகணபதி நகர், சின்னத்திருப்பதி, சேலம்-8. ரா. கார்த்திக், 179, மாரியம்மன் கோவில் தெரு, சிலநாயக்கன்பட்டி, சேலம்-201. N. சுலைமான், 202/9, அசோக் நகர், 5வது கிராஸ், கரை கரை முனியப்பன் கோயில் தெரு, கிச்சிப்பாளையம், சேலம்-15. K. அரவிந்த், 9/15 மாரியம்மன் கோவில் தெரு, பெரமனூர், சேலம். L. ரமேஷ்குமார், 183, பெரியார் தெரு, பழைய சூரமங்கலம், சேலம்-5.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

தலைவர் - M. மாரிசாமி, எண் 21/31, கூட்டுறவு காலனி, தேனாம்பேட்டை, சென்னை 600018

துணைத் தலைவர் - செந்தில்குமார் அய்யாவு, எண் 23, 45வது தெரு, 9 வது அவென்யூ, அசோக்நகர், சென்னை 600083

துணை அமைப்பாளர்கள் - விஷ்ணுசங்கர், எண் 120, 3வது குறுக்கு தெரு, தெற்கு கேசவ பெருமாள்புரம், சென்னை 600028 லயன் பா, சக்திவேல், எண் 120, 2வது மேட்லி தெரு, தி நகர், சென்னை 600024 ஹரிநாராயணன், எண் 17, 9 ரங்கராஜபுரம், முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024. த.பத்மநாபன், எண் 1, ராஜீ நாயக்கன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600018. உ.துரைக்கண்ணு , எண் 25, ரூதர்போர்டுபுரம் மேதை, அம்பேத்கார் பாலம், சென்னை 600004. பி.சார்லி, எண் 32, என்-பிளாக் வள்ளீஸ்வரன் தோட்டம், சென்னை 600028. K. L. சிவாநந்தம், எண் 4, கர்ணன் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

தலைவர் - தி.சாரதி பாலாஜி, எண் 75/17, வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை 600019. துணை

தலைவர் - எம். மனோஜ், எண்.21 எஸ்.பி.கோயில் தெரு, திருவொற்றியூர், சென்னை 600019

**கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்**

தலைவர் - M.ஜெயின்ஜெரால்டு 1/127, முள்ளங்கினாவிளை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். துணைத் தலைவர்கள் - T. பிறேம் அருள்ராஜ் 19/28 E, பனங்கரை, அருமனைஅஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் - **ஜான்ஸிலின்சேவியர்,** 10/155, பண்டாரவிளை வீடு, ஆற்றூர், வியன்னூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - G.M. பிரவீன், 31-40/2, ஸ்ரீஉத்ராடம், கொடுங்குளம், மார்த்தாண்டம் அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ஜெனோரெனிட்டஸ், 4/122, வெள்ளியாவிளை, பாலபள்ளம் அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். மைக்கேல்ரதீஷ், 3-1995/1, குழிவிளை, முளவிளை, வியன்னூர்அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ரா. வலம்புரிஜான், 9/224, இனையம் 629193, கன்னியாகுமரி மாவட்டம். அர்வின், 8/21, ஆலுவிளை, மைலோடு, ஆலங்கோடுஅஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ம. சேவியர், புல்லாணி விளை, செங்கோடி அஞ்சல், கன்னியாகுமரி 629177.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - பூவராகவன், 149, மாரியம்மன் கோவில் தெரு, திருவண்ணாமலை. பா.சற்குணம், 788ஏ, வானவில் நகர், 3வது தெரு, வேங்கிக்கால், திருவண்ணாமலை மாவட்டம்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - தி. சாரதி பாலாஜி, 75/17, வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை-19.

**மதுரை மாநகர் மாவட்டம்**

தலைவர் - எஸ். அசோக் பாபு, 29/15, சப்பாணி கோவில் தெரு, தெற்கு சந்து, தெற்குவெளி வீதி, மதுரை. துணைத்

தலைவர் - பி. விநாயகமூர்த்தி, 10ஏ, திருவள்ளுவர் நகர் 6வது தெரு, திருவள்ளுவர் நகர், பழங்காநத்தம், மதுரை.

அமைப்பாளர் - **நரேந்திரன் ஜெயராமன்,** 66, ஸ்ரீராம் கார்டன், கொடிக்குளம், மதுரை - 7.

துணை அமைப்பாளர்கள் - பி.ஜெ. ராமர், பிளாட் நம்பர் 4, மீனாட்சி அவென்யூ, பொன்னகரம் 3வது தெரு, மதுரை - 625010. பா. டேனியல் தங்கராஜ், ஆனந்தராஜ் நகர், கொடிக்குளம், மதுரை - 625007. எ.கே. உலகநாதன், 33, முனியாண்டி கோயில் தெரு, சி.எம்.ஆர். ரோடு, சின்னகண்மாய், மதுரை - 625009. தாய் கே. முரளி கணேஷ், 14ஏ, சத்தியமூர்த்தி 2வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை - 625002. பி. நாகேந்திரன், எண். 3, நாகேந்திரபுரம், அழகுசுந்தரம் நகர், பைக்காரா, மதுரை - 625004. தீபக் ஜெபின், 27ஏ, அழகர் நகர் 6வது தெரு, கே. புதூர், மதுரை. எஸ். மணிமாறன், 29/13, சப்பாணி கோயில் தெற்கு சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை - 625001. க. சசிகுமார், 27, அழகரடி 2வது தெரு, கரிமேடு, மதுரை - 625016. எம். வீரமணி, பி.டி. ராஜன் ரோடு, 5வது குறுக்குத் தெரு, நரிமேடு, மதுரை.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.2.2024

கார்த்திகேய சிவசேனாபதி
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# கடலூரில் இன்று மாரத்தான் போட்டி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைக்கிறார்!

கடலூர், பிப். 25-

முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரெட் பிட்னஸ் அகாடமி சார்பில், மு.க.ஸ்டாலின் மாரத்தான் போட்டி இன்று (25.02.2024-ஞாயிற்றுக்கிழமை), காலை 6.30 மணி அளவில், கடலூரில் நடைபெற உள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி கொடியசைத்து மாரத்தான் போட்டியை துவக்கி வைக்க உள்ளார்.

கழகத் தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன்,

கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐய்யப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பா. கலைக்கோவன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர். டவுன் ஹாலில் இருந்து மாரத்தான் போட்டி துவங்கி நடைபெற உள்ளது.

### வேலூரில் தி.மு.க.

# சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப். 25 -

வேலூரில் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் இன்று (25.02.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில், வேலூரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட, மாநகர, தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

மார்ச் 1 முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளினை எழுச்சியோடு கொண்டாடுதல்.

"நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்" கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நடத்துவது.

பாசிசத்தை வீழ்த்தும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள் குறித்து...

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், 69 சாத்தனூர் கிராமத்தில் உள்ள ஒன்றிய நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் புதிய கட்டிடங்கள் கட்டிட மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல்நாட்டுவிழா மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இக்கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருவிடைமருதூர் ஒன்றியக் குழு தலைவர் சுபாதிருநாவுக்கரசு, துணைத்தலைவர் கி.பத்மாவதி கிருட்டிணராசு, வட்டார வளர்ச்சி அதிகாரி அருளாளன் மற்றும் அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர் இரா.முருகன், ஒன்றியக் குழு முன்னாள் துணைத் தலைவர் ரெ.கருணாநிதி, ஆடுதுறை பேரூராட்சி கழக செயலாளர் கோ.சி.இளங்கோவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஜி.கே.எம்.இராஜா, ஊராட்சி மன்ற தலைவர் பா.தெட்சிணாமூர்த்தி. முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர். மு.சந்திரசேகரன், வழக்கறிஞர் மு.இரவிச்சந்திரன், வார்டுக் கழக செயலாளர்கள்.. ச.வேல்முருகன், கை.சி.மதியழகன், சி.சம்மந்தம், கே.பி.சு.உலகநாதன், சு.இராசா, கே.ரவிச்சந்திரன், பால்ராஜ், கோ.சாமிநான், நரசிங்கன்பேட்டை பால. இராசேந்திரன், சகாதேவன், ரெகுபதி, க.சங்கர் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




Guidance TamilNadu

கலைஞர் 100 1924 - 2023

# தென் தமிழ்நாட்டில் முதல் மின் வாகனத் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழா

VINFAST

தூத்துக்குடி



அடிக்கல் நாட்டுபவர்

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

இடம்: சிப்காட் சில்லாநத்தம் தூத்துக்குடி

நாள்: 25.02.2024

நேரம்: காலை 9.30 மணி

முதற் கட்டம்

முதலீடு 4,000 கோடி ரூபாய்

வேலை வாய்ப்பு 3,500 நபர்கள்

மொத்த முதலீடு 16,000 கோடி ரூபாய்



தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம்

50 நாட்களில்

25 பிப்ரவரி 2024

அடிக்கல் நாட்டியது

www.investingintamilnadu.com

செ.ம.தொ.இ/209/வரைகலை/2024

investtn guidance_tn investintn


## தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த மருத்துவர்கள் - கல்வியாளர்களை உருவாக்கியது போல்

# தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்!

## விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை,பிப்.25–

**சென்னை கலைவாணர் அரங்கத்தில், விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் வேலை வாய்ப்பில், மூன்று சதவிகித ஒதுக்கீட்டின் அடிப்படையில், 4 பேர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.**

**இந்தியா மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற தேசிய & பன்னாட்டு அளவிலானப் போட்டிகளில் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த, 622 வீரர் – வீராங்கனையர் – மாற்றுத்திறனுடைய வீரர் வீராங்கனையருக்கு கழக அரசு சார்பில் ரூ.16.24 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகையையும் பல்வேறு போட்டிகளில் சாதனைகளைப் படைத்து வரும் வீரர் – வீராங்கனையர் 4 பேருக்கு விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான பணி நியமன ஆணைகளையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் பேசியதாவது:–**

தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு, இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்று நம் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த நம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 16 கோடியே 24 லட்சம் ரூபாய் அளவில் உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவாவில் நடைபெற்ற 37வது தேசிய விளையாட்டுப் போட்டி, தமிழ்நாட்டில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி, ஜெர்மனியில் நடைபெற்ற 8வது வேர்ல்டு கேம்ஸ், தாய்லாந்தில் நடைபெற்ற உலகத்திறன் விளையாட்டுப் போட்டி, டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி, சர்வதேச பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப், ஏசியன் சைக்கிளிங் சாம்பியன் மற்றும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய நீச்சல் மற்றும் ரோலர்ஸ் ஸ்கேட்டிங் போட்டிகள் எனக் கிட்டத்தட்ட 9க்கும் மேற்பட்ட போட்டிகளில் பதக்கங்களை வென்ற 622 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 16 கோடியே 24 லட்சம் அளவிற்கு இன்றைக்கு உயரிய ஊக்கத்தொகையை நமது முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இங்கு வழங்கியிருக்கின்றோம்.

கடந்த டிசம்பர் மாதம் பல்வேறு போட்டிகளில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கு 5 கோடியே 28 லட்சம் அளவிற்கு உயரிய ஊக்கத் தொகையை வழங்கினோம். அதற்கு முன்பாக நவம்பர் மாதத்தில், பல்வேறு போட்டிகளில் வென்ற நம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ரூபாய் 3 கோடியே 80 லட்சம் அளவிற்கு உயரிய ஊக்கத் தொகையைக் கொடுத்தோம்.



### ஒரே மாநிலம் தமிழ்நாடு!

சீனாவில் நடைபெற்ற ஏசியன் கேம்ஸ்சில் வென்ற நம் வீரர், வீராங்கனைகளுக்கு 9 கோடியே 40 லட்சம் ரூபாய் அளவிற்கு நமது முதலமைச்சர், அவர்களின் கைகளாலேயே கடந்த அக்டோபர் மாதம் உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார்கள். இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநில அரசு தன் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கத் தொடர்ந்து இதுமாதிரியான உயரிய ஊக்கத்தொகையை வழங்குகிறது என்றால், அந்த ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டும்தான்.

நம் துறைக்கு, பட்ஜெட் மிகக்குறைவு தான். வெறும் 440 கோடி ரூபாய்தான். அந்த நிதி ஒதுக்கீட்டில் எவ்வளவு அதிகமாகத் தரமுடியுமோ, அவ்வளவு அதிகமாக நம் முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாகக் கொடுக்க வேண்டுமென்று கூறவே, தொடர்ந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டி

உங்களின் சாதனைகள் உயர்வது போல இந்த ஊக்கத்தொகையும் வரும் காலங்களில் நிச்சயமாக அதிகமாக்கப்படும். உங்கள் திறமைக்கு ஒரு அங்கீகாரமாகத்தான் உயரிய ஊக்கத்தொகையை, நம் திராவிட மாடல் அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

நம் திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, எப்படி அனைத்துத் துறைகளிலும் இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கின்றதோ, அதேபோல விளையாட்டுத் துறையை அமைக்கத்தான் நாம் அத்தனை பேரும் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

அரசு முயற்சிகளை சரியாகப் பயன்படுத்தி, நீங்கள் சாதனை படைக்கும்போதுதான் அந்த முயற்சிக்கு ஒரு பலன் ஏற்படுகின்றது. அந்தப் பலன் அடுத்தடுத்து புதிய முயற்சிகளை எடுக்கவும், உங்களுக்கு இன்னும் வலிமையாகத் துணை நிற்கவும், ஓர் உந்துதலை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது.

இன்றைக்கு தமிழ்நாடு விளையாட்டுத்துறைக்குப் பல்வேறு அமைப்புகளிலிருந்து பாராட்டும், அங்கீகாரமும் குவிந்து வருகின்றன. சென்ற வாரம், பாரம்பரியமிக்க `தி இந்து’ குழுமத்தின் சார்பாக, `ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ இதழ் தன் ‘ஏசஸ்2024 ஸ்போர்ட்ஸ் விருது’ நிகழ்ச்சியில் நம் தமிழ்நாட்டிற்கு, `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதைத் தந்து நம்மைப் பெருமை படுத்தினார்கள். அந்த விருது உங்களைத்தான் சேரும்.

அதற்கு முன்பாக, `கான்பிடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்’ என்ற அமைப்பின் சார்பாக, நம் தமிழ்நாட்டிற்குப் பிசினஸ் ஸ்போர்ட்ஸ் அவார்டு நிகழ்ச்சியில் நம் அரசிற்கு, `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதையும் கொடுத்து, நம்மைப் பெருமை படுத்தினார்கள். அந்த விருதும் உங்களுக்குத்தான் சேரும்.

### உங்களால்தான் நம் அரசிற்கு பெருமை!

இந்த அங்கீகாரமெல்லாம் நம் அரசிற்குக் கிடைக்கிறது என்றால் காரணம், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உங்களுக்குத்தான் அந்த முழுப் பெருமையும். உங்களால்தான் நம் அரசிற்கு இத்தனை பெருமைகளும், பாராட்டுகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில், கேலோ இந்தியா இளைஞர்கள் போட்டியை தமிழ்நாட்டில் முதன்முறையாக நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் கூட 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என முதன்முறையாக 98 பதக்கங்களை தமிழ்நாடு வென்றது. தமிழ்நாடு பதக்க பட்டியலில் சென்ற வருடம் 8வது இடத்தில் இருந்தோம். இந்த வருடம் முதல்முறையாக 2வது இடத்திற்கு வந்திருக்கிறோம்.

நம் கழக அரசு தன் திட்டங்களால் இதுவரை தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கியிருக்கிறோம். கல்வியாளர்களை உருவாக்கியிருக்கிறோம். ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியிருக்கிறோம். இப்பொழுது நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற பணியில் ஈடுப்பட்டிருக்கிறோம். அந்த விளையாட்டு வீரர்கள் வேறு யாரும் கிடையாது. இங்கு வந்து அமர்ந்திருக்கக்கூடிய உங்களைத்தான் நான் சொல்கிறேன். இன்னும் பல விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளையும் மிகப்பெரிய அளவில் சென்ற வருடம் நடத்தி முடித்தோம்.

கிட்டத்தட்ட 3 லட்சத்து 71 ஆயிரம் பேர் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள். பல திறமையாளர்களை அடையாளம் காட்டியது, கைபிடித்து அழைத்து வந்தது, அந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்தான்.

குறிப்பாக, கிராமப்புறங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்குச் சரியான களம் அமைத்துக் கொடுப்பதற்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் அடித்தளமாக அமைந்தன.

`கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’

சென்ற வாரம்கூட மதுரையில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தோம். 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 600 கிராம ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்குகின்ற முயற்சியாக, மதுரை மாவட்டத்தில் உள்ள 420 ஊராட்சிகளுக்கு முதற்கட்டமாக கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை அளித்தோம்.

இந்தியாவில் ஸ்போர்ட்ஸ் என்றால், தமிழ்நாடுதான் ‘சென்டர் ஆப் அட்ராக்ஷனாக’ இருக்கவேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சரின் ஒரே எண்ணம். அதனால்தான் தொடர்ச்சியாக ‘கேலோ இந்தியா’ ‘யூத் கேம்ஸ்’, ‘ஏசியன் கப் ஹாக்கி டோர்னமென்ட்’, ‘ஸ்குவாஷ் வேல்டு கப்’, ‘வேல்டு சர்ஃபிங் லீக்’, ‘சைக்கிளத்தான்’, ‘சென்னை செஸ் மாஸ்டர்ஸ்2023’, ‘நேசனல் ஹாக்கி டோர்னமென்ட்’ போன்றவற்றைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம். இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு திட்டம். ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்’ என்ற நிறுவனத்தை உருவாக்கி, அதன் மூலமாக வீரர், வீராங்கனைகளுக்கு உதவித்தொகையையும் வழங்கி வருகின்றோம். இதுவரைக்கும் 300க்கும் அதிகமான விளையாட்டு வீரர்களுக்கு, தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக 6 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலமாக நிதி உதவி அளித்திருக்கின்றோம்.

இன்னும் சொல்லப்போனால், நம் முதலமைச்சர் அவர்கள்தான் முதன்முறையாக தன் சொந்த நிதியிலிருந்து நாங்கள் கேட்டுக் கொண்டதின் பேரில், 5 லட்சம் ரூபாயை இந்த சாம்பியன் பவுண்டேசனுக்குக் கொடுத்தார்கள். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து உதவித்தொகை பெற்ற பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் சாதனை படைத்துள்ள தங்கை பூஜா ஸ்வேதா, தம்பி சுதர்சன், ஜெகதீஷ் டில்லி, தமிழரசி, எத்திக் நாதல்லா, சங்கீதா, மனோஜ், கணேசன், பாலசுப்ரமணியன், ஆர்.வெண்ணிலா, இன்பதமிழி, எ.நளினி, செலிபரல் பாலிசி மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இங்கு வந்திருக்கிறீர்கள்.

### ஒலிம்பிக் அகாடமி

உங்கள் அத்தனைப்பேருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, ஒலிம்பிக்கிற்குத் தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, சென்னை உள்ளிட்ட இடங்களில் ஒலிம்பிக் அகாடமிகளையும் திறந்து வைக்கின்றோம்.

தமிழ்நாடு விளையாட்டுத்துறைக் கட்டமைப்பை மேம்படுத்த தொகுதிக்கு ஒரு ‘மினி ஸ்டேடியம்’ கட்டுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஒன்பது மினி ஸ்டேடியங்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் பணிகளைத் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இதுவரை இல்லாத அளவிற்கு 76 பயிற்சியாளர்களை மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் நியமித்திருக்கிறோம். ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் உட்பட, தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்தியும் வருகின்றோம்.

6 மாவட்டங்களுக்கு மாவட்ட விளையாட்டு அரங்கம். 4 இடங்களில் ஒலிம்பிக் அகாடமி, 6 இடங்களில் பாரா விளையாட்டு அரங்கங்களையும் ஏற்படுத்தவுள்ளோம். தமிழ்நாட்டைப்போல மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு மாநிலம் இந்தியாவிலேயே இருக்க முடியாது.

ஏனென்றால், நம் அரசு திராவிட மாடல் அரசு என்கின்றோம். நம் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசு என்றால் ‘எல்லோருக்கும் எல்லாம்’ கிடைக்க வேண்டும் என்று சொல்கிறார். அதுதான் அவரின் லட்சியம். ஆகவேதான் மாற்றுத்திறனாளிகளின் சாதனைகளுக்குத் தொடர்ந்து நம் முதலமைச்சர் அவர்களுடன் நம்முடைய துறையும் துணை நிற்கும்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு உந்துசக்தி!

ஒரு மாற்றுத்திறனாளி விளையாட்டுப் போட்டிகளில் சாதிக்கும்பொழுது அந்த வெற்றி, 100 மாற்றுத்திறனாளிகளுக்கு அது உந்துசக்தியாக இருக்கும். எனவே, மாற்றுத்திறனாளி வீரர்களுக்குத் தொடர்ந்து பக்கபலமாக நம் முதலமைச்சர் அவர்களும், நம் அரசும் துணை நிற்கும். இங்கே வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவரின் வெற்றிப் பயணமும் தொடரட்டும்.

‘நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்’ என்று நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நீங்கள் நீண்ட தூரம் ஓடுவதற்கும், அதிக உயரம் தாண்டுவதற்கும் நம் முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதுமே உங்களுக்குத் துணை நிற்பார்கள்.

அமைச்சர் என்கின்ற வகையில் மட்டுமல்ல, ஓர் அண்ணனாக, ஒரு சகோதரனாக நானும் உங்களுக்கு எப்பொழுதுமே துணை நிற்பேன் என்ற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்கு வழங்குகின்றேன்.

உயரிய ஊக்கத்தொகைப் பெற்றுள்ள அத்தனை வீரர்கள், வீராங்கனைகளுக்கும் என் வாழ்த்துகளையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், பத்திரப் பதிவு மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் பி. மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, பத்திரப் பதிவு மற்றும் வணிக வரித்துறையின் அரசுச் செயலர் ஜோதி நிர்மலா, ஐ.ஏ.எஸ்., சென்னை துணை மேயர் மகேஷ்குமார், வணிக வரித்துறையின் ஆணையர் டாக்டர்.ஜெகநாதன் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சைக்கிளிங் ரேசில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற தமிழரசி, பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்நூக்கர்ஸ் உலகச் சேம்பியன் ஸ்ரீ கிருஷ்ணா, ஐவாஸ் தங்கப் பதக்க வெற்றியாளர் கீர்த்திகா, மலையேற்ற வீராங்கனை முத்தமிழ்ச்செல்வி, துப்பாக்கி சுடுதல் போட்டி வீராங்கனை நிலா ராஜாபாலு, செலிபிரல் பேலிசி ஸ்போர்ட்ஸ் அசோசியேசன் தலைவர் உமா ராணி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கலைஞரும் நானும்

**58**

“**க**டவுளை வணங்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம் போல, தன்னோடு பயணித்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அணுக்கத்தை உணர வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வகையில் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பேன் நான். மரியாதை, அன்பு, மனித மாண்பு என எல்லா வகையிலும் அவர் ஈடுஇணையற்றவர்” என நினைவு கூர்கிறார் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்.

■ **பி.வில்சன்,** எம்.பி, மூத்த வழக்கறிஞர்

# “வாய்யா... ‘வின்’சன்!”



“**க**ழகத்துக்கும், கலைஞருக்கும் ஒரு சோதனையான காலகட்டத்தில்தான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவானது. அப்போது முதல், பலமுறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தாலும், ஒவ்வொரு முறையும் வியப்புகளை அளிக்கும் ஆளுமையாக கலைஞர் இருந்தார்.

1994-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கழகத்தின் பெயர், கொடி தொடர்பான வழக்கு. நான் ஜூனியராகப் பணியாற்றிய மூத்த வழக்கறிஞர் கே.வி.வெங்கடபதியிடம் அளித்தார் கலைஞர். அவர் கலைஞரைச் சந்திக்கச் செல்கையில் என்னையும் அழைத்துச் சென்றார். அப்போதுதான் முதல்முறையாக கலைஞரைப் பார்க்கிறேன். அதற்கு முன்பு வரை கலைஞரை தூரத்தில் இருந்து பார்ப்பது, அவர் பேசுவதைக் கேட்பது என்கிற நிலையில்தான் இருந்தேன். அந்த வழக்கு கலைஞரின் உயிருக்கு இணையான வழக்கு. அந்த வழக்கில் கழகத்துக்கு சாதகமாக ஆணை பெற்றோம். அப்போது அறிவாலயத்தில் திரண்ட வழக்கறிஞர்களுடன் நானும் இடம் பெற்றிருந்தேன்.

## தன்மையா சொல்லலாமே...

கழகத்தின் வழக்கறிஞர் அணியுடன் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு அப்படித்தான் வந்தது. வலுவான தலைவர்களைக் கொண்ட வழக்கறிஞர் அணி என்பது கழகத்தின் சொத்து. சில சமயங்களில், சட்ட நுணுக்கங்களை, கலைஞரே விளக்குவார். நாம் கையாளும் வழக்குகளின் நிலை, எப்படியான வாதங்களை வைப்பது என்பதை அவரே குறிப்பிடுவார்.

ஆங்கிலத்தில் இருக்கும் வழக்கு சம்பந்தமான பிராதுகளைப் படித்துக் காட்டுகையில், திருத்தங்கள் சொல்வார். வழக்கறிஞராக நாம் அழுத்தம் கொடுத்திருக்கும் சில இடங்களில், ‘இதை ‘ஹார்ஷ்’ஆ சொல்ல வேண்டாம்யா, கொஞ்சம் தன்மையா சொன்னால் என்ன?’ எனக் கேட்பார். அதுபோல, நீதிமன்றத்தைக் குறை சொன்னால் அவருக்குப் பிடிக்காது. நீதித் துறை மாண்பை அவ்வளவு மதிப்பார்.

பின்னர் பல சந்தர்ப்பங்களில், பல வழக்குகள் குறித்து கலைஞர் அவர்களுடன் பேசிவந்தாலும், நான் நெருக்கமானது 2006-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வி தொடர்பான வழக்கின்போதுதான். நான் அப்போது ‘அசிஸ்டென்ட் சொலிசிட்டர் ஜென்ரலாக’ ஒன்றிய அரசு வழக்குகளைக் கவனித்து வந்தேன். பின்னர் மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக கலைஞர் நியமித்தார்.

கலைஞர் அவர்களின் மிகப் பெரிய கனவுகளில் ஒன்று சமச்சீர் கல்வி. ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வு எல்லாவற்றையும் கடந்து, அனைவருக்கும் பொதுவான பாடத்திட்டம் மற்றும் கல்விமுறையை அளிக்க வேண்டும் எனச் சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்தார். அந்தச் சட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

டெல்லியில் இருந்து வழக்கறிஞர்களைக் கொண்டு வந்து வாதிடலாம் எனச் சிலர் சொன்னபோது, “வேண்டாம்யா, வில்சன் பாத்துகிடட்டும்” என என்னை அடையாளம் காட்டினார் முதலமைச்சர் கலைஞர். அந்த வழக்குக்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். மேலும் பல பாடத்திட்ட நூல்களில் இருந்து குறிப்புகள், பள்ளி ஆசிரியர்கள் 30 பேரின் உதவியுடன், நீதிமன்றம் மறுக்க முடியாத அளவுக்குத் தரவுகளைச் சமர்ப்பித்து வெற்றி பெற்றோம். அந்த வழக்கில் கலைஞர் அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கு கல்விக் கட்டண நிர்ணயச் சட்டம் கலைஞர் கொண்டு வந்தார். அதை எதிர்த்து அனைத்து தனியார் பள்ளிகள் ஒன்றுசேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்யக் கோரினர். அப்போதும் "டெல்லி வழக்கறிஞர் வேண்டாம்; வில்சன் பாத்துகிடட்டும்” என என்னை அடையாளம் காட்டினார் முதல்வர் கலைஞர். பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்

அதன் பின்னர் பல வழக்குகளில் கலைஞர் அவர்களின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்பப் பணியாற்றி இருக்கிறேன். நமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல சமூக நீதித் திட்டங்களை, 2011-ஆம் ஆண்டு காலத்தில் நிர்மூலமாக்கத் திட்டமிட்டார் ஜெயலலிதா அம்மையார். முதலில் அவர் கை வைத்தது சமச்சீர் கல்வி. சமச்சீர் கல்வித் தடைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து, உச்சநீதிமன்றம் வரை போராடித் தடை பெற்றோம். அதற்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். எல்லாவற்றுக்கும் பின்புலமாக கலைஞர் இருந்தார். அந்த நாட்களில் அவருக்கு முதுகு வலிப் பிரச்சினைகள். மருத்துவ ஓய்வில் இருந்தாலும், இதைக் கவனிக்கத் தவற மாட்டார்.

அதற்குக் காரணம், தான் கொண்டு வந்த திட்டம் என்பதால் அல்ல; சமூகநீதி நோக்கி அவர் கொண்டுவந்த ஒரு திட்டம் சிதைந்து விடக்கூடாது என்கிற எண்ணம்தான். அதே போல, பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்.

## உன் கடவுளின் விருப்பம்

முக்கியமாக, அப்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகும் பரிந்துரைப் பட்டியலில் என் பெயர் இருந்தது அவருக்குத் தெரியும். ஆனாலும், அரசுக்கு எதிராக வழக்கினை எடுக்கச் சொன்னார். நானும் அதைப் பற்றி யோசிக்கவில்லை. கலைஞர் சொன்னால் அதைச் செய்வது என்பதுதான் எனது மந்திரம்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற வேண்டும் என முடிவு செய்கின்றனர். அவருக்கு அந்தச் செய்தி கிடைத்த மாத்திரத்தில், இரவு 11 மணிக்கு போன் செய்தார். இதற்கு உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றார். “சரிங்கய்யா” எனக் கூறிவிட்டு, காலையில் ஆவணங்களைத் தயார் செய்யலாம் எனத் தூங்கிவிட்டேன். காலை 5 மணிக்கு கலைஞரிடமிருந்து போன் வருகிறது. “என்னய்யா வழக்கு தயார் பண்ணிட்டீங்களா?” என்கிறார். அந்த வேகத்துக்கு நம்மால் ஈடு கொடுக்க முடியாது. அதிலும் நாம் தடை உத்தரவு வாங்கினோம். இன்று அண்ணா நூற்றாண்டு நூலகம், அறிவு பரப்பும் சுரங்கமாக நீடித்து இருக்கிறது என்றால், அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான் கை காட்ட வேண்டும்.

> **அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம்.**

இப்படிக் கழகத்தின் சார்பிலான தொடர் சட்டப் போராட்டங்கள், அவற்றில் வெற்றி பெறுவது என இருந்தன. ஒரு நாள் அவரைச் சந்திக்கச் செல்கையில்தான் எனது பெயரை “வாய்யா ‘வின்’சன்” (WINSON) என அன்பு ததும்ப அழைத்தார்.

இப்படியான வழக்குகளால், எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை என்பதைக் குறிப்பிடுகையில், ஒருமுறை சொன்னார், “நீ வணங்கும் கடவுள், நீ என்கூடத்தான் இருக்க வேண்டும் என விரும்புகிறார்ய்யா, அதனால்தான் உனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை” என்றார். எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பினை விடவும், கலைஞர் என் மீது கொண்டிருந்த அன்பு மிக உயர்வாகத் தெரிந்தது. அந்த வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள் என்பதைப் பின்னாளில் நான் உணர்ந்தேன். இன்று, இந்தியாவுக்கே சட்டங்களை இயற்றும் மன்றத்தில் நான் நின்று பேசுகிறேன் என்றால், கலைஞரின் அந்த வார்த்தை உயிர்பெற்றுள்ளது என்றுதானே பொருள்.

அவரது வார்த்தைக்கு, இன்னொரு வரலாற்றுத் தருணமும் இருக்கிறது என நான் உணர்ந்தது அவரது இறுதி மரியாதை நாள். அவரை அடக்கம் செய்ய நாம் நடத்திய சட்டப் போராட்டம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது.

மெரினாவில் பேரறிஞர் அண்ணாவுக்கு அருகில்தான் அவர் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம். அந்த உத்தரவுடன் வந்து கலைஞரைப் பார்க்கிறேன்; “நீ என்னோடு இருக்க வேண்டும் என, உன் கடவுள் விரும்புகிறார்” என்று அவர் சொன்னது நினைவுக்கு வருகிறது. இதற்காகத்தான் உங்களோடு இருக்கச் சொன்னீர்களா? என கண்களில் கண்ணீர் ததும்ப அவரின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்தேன். அதுதான் அவர். எல்லாவற்றிலும் அவர் தீர்க்கதரிசி..!"

...பகிர்வார்கள்

## பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு!

**ம**ணிப்பூர் கலவரத்தின்போது 2 பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட காட்சிகள் உலகையே உலுக்கின. மணிப்பூரில் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆட்சியில் நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. பா.ஜ.க.வின் 10 ஆண்டு ஆட்சிக்காலம் முடியும் தருவாயில், பெண்கள் பாதுகாப்பின் நிலை என்னவென்பதை தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் படம் பிடிக்கின்றன.

2014-இல் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஒரு லட்சத்துக்கு 55.3 என்ற அளவிலிருந்த நிலையில், 2022-இல் 66.4 ஆக அதிகரித்திருக்கிறது. அதே சமயம் இந்தியாவிலேயே பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை முதலிடத்தில் இருப்பதாக, சமீபத்தில் ஓர் ஆய்வறிக்கை வெளியானது கவனிக்கத் தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



## விடுதலைப் படம்!



கிறிஸ்டோ ஹுசைன்

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற காரணத்துக்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் 62 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார். அவர் விடுதலையான போது என்னுடைய தாத்தா பாளை எம்.எஸ்.ஹுசைன் அவர்கள் வரவேற்கச் சென்றார். கலைஞருக்கும் என் தாத்தாவுக்குமான நட்பு அப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது. தலைவர், பாளையங்கோட்டையில் எங்கள் இல்லத்துக்கு வருகை தந்த போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–கிறிஸ்டோ ஹுசைன்,**
**இளைஞர் அணி, பாளையங்கோட்டை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் பிரிவு!

**1961-ஆம் ஆண்டு ஜனவரி 21, 22 தேதிகளில் கழகத்தின் செயற்குழுவும் பொதுக்குழுவும் வேலூரில் கூடியது. ஈ.வெ.கி.சம்பத் செயற்குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது, கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலருக்கு எதிராகக் கருத்துகளை முன்வைத்தார். இதனால், கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது. மறுநாள் கட்சியின் அவைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாகக் கடிதம் ஒன்றை அளித்தார். அவரை அமைதிப்படுத்தி, பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்கு பேரறிஞர் அண்ணா மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 399




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131